# இந்திய அஞ்சல் துறை

## செல்வமகள் சேமிப்பு திட்டம்

அன்பார்ந்த பெற்றோர்களே..!

மத்திய அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ள செல்வமகள் சேமிப்பு திட்டம் ( **Sukanya Samriddhi Yojana** ) பெண் குழந்தையின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் உறுதியளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- பத்து வயதிற்குட்பட்ட பெண் குழந்தைக்கான புதிய சேமிப்பு திட்டம். (துவக்க கால சலுகையாக 2.12.2003 - க்குப் பிறகு பிறந்த பெண் குழந்தைகளுக்கு ).
- இந்தக் கணக்கு அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் பெண் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழை சமர்ப்பித்து துவங்கலாம்.
- பெற்றோர் / காப்பாளர் ஒரு குழந்தைக்கு ஒரு கணக்கு மட்டுமே துவங்கலாம். ஒருவர் அதிகபட்சமாக 2 பெண் குழந்தைகளுக்கு 1 கணக்கு வீதமாக 2 கணக்குகள் ஆரம்பிக்கலாம்.
- இதற்கு 8.6 % ஆண்டு கூட்டு வட்டி 2016 - 17 நிதியாண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.
- கணக்கு துவங்க குறைந்த பட்ச ஆரம்ப முதலீடாக ரூ.1000 / - தொடர் சேமிப்பாக 100 / - மடங்காக பணம் செலுத்தலாம். ஒரு நிதியாண்டிற்கு குறைந்த பட்சம் ரூ.1000 / - அதிகபட்சமாக ரூ.1,50,000 / - செலுத்தலாம்.
- கணக்கு துவங்கிய தேதியில் இருந்து 14 வருடம் பணம் செலுத்தலாம்.
- கணக்கு துவங்கிய தேதியில் இருந்து 21 வருடம் கழித்து கணக்கு முதிர்வடையும்.
- பெண் குழந்தைக்கு 18 வயது முடிவு அடைந்தவுடன் கணக்கில் உள்ள இருப்புத் தொகையில் 50 % பணத்தைப் பெண்ணின் மேற்படிப்பிற்காகவோ, திருமணத் - திற்கோ எடுத்துப் பயன் பெறலாம்.
- பெண்ணின் திருமணத்திற்குப் பிறகு கணக்கு முதிர்வடைவதற்கு முன்பே கணக்கை எவ்வித வட்டி இழப்புமின்றி முடித்துக் கொள்ளலாம்.
- ஆண்டு தோறும் சேமிக்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு 80 (C) படி உண்டு

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள அஞ்சல் அலுவலகத்தை அணுகவும்.

**Registered with RNI under No. TNTAM / 2004 / 14287**
**Published on 15.03.2017. Postal Registration No. VGR / 004 / 2015 - 2017**
**Posted at RMS Virudhunagar**

**If un delivered please return to :**
**Payanam Publishers**
**Melathulukkangulam ( P. O )**
**Mallanginar**
**virudhunagar ( Dt ) - 626 109**

**To,**





- செயல் -
அதுவே சிறந்த சொல்


பொதுவுடைமை தத்துவ, அரசியல், பண்பாட்டு இலக்கிய இதழ்

# பயணம்

கருத்தாலும், கரத்தாலும் இணைவோம்

பாதை-1, மார்ச் 2017, தடம் - 119

## உழவன்..!



**த**ன்
உதிரக் குழாய்களை
உருக்கி உருக்கி - நம்
உணவுக் குழாய்களை
பெருக்க வைப்பவன்.



அவன்
கண்ணீர் முத்தும்
வியர்வை முத்தும்
கலந்த வடிவமே
நெல்மணி முத்து.

அள்ளி அவன் பிடிக்கும் கதிர்
தங்கம் போல் தகதகப்பது - அவன்
உள்ளங்கை வெப்பத்தின்
கதகதப்பால்தான்.



சளைக்காமல் புல்போட்டுப்
பசி தீர்க்கும் உழவனே
மாட்டுக்குத் தந்தையானவன் - முகம்
சுழிக்காமல் சாணத்தை
எடுக்கின்ற அவனே
மாட்டுக்குத் தாயுமானவன்.

பொற்பாதம் வணங்கத்தான் - அவன்
போகும் வரும் வரப்பில்
நெற்கதிர் கிடக்கிறது
நெடுஞ்சாண் கிடையாக..!


வல்லம்
தாஜ்பால்


ரூ.10


## பயணம் பதிப்பக வெளியீடுகள்





தடம் – 1 தடம் – 2 தடம் – 3 தடம் – 4 தடம் – 5

| நூல் | நூலாசிரியர் | விலை |
|---|---|---|
| 1. விருதுநகர் மாவட்ட சாலியர் வாழ்வியல் (கட்டுரை) | அருப்புக்கோட்டை இராஜபாண்டி | ரூ.25/- |
| 2. கைக்குட்டை கனவுகள் ( கவிதை ) | தேவராஜ் விட்டலன் | ரூ.20/- |
| 3. பகத்சிங் மணி மொழிகள் | பாவலர். கருமலைப் பழம் நீ | ரூ 40/- |
| 4. நிகழ்வெளி ( கவிதை ) | கவிஞர் சு. மதிவண்ணன் | ரூ 50/- |
| 5. பயணங்கள் விதைத்தது (கவிதை) | பாடுவாசி ரகுநாத் | ரூ 30/- |

நூல்கள் வேண்டுவோர் நூலுக்குரிய பணத்தை பயணம் முகவரிக்கு அனுப்பவும்


### பயணம் தமிழகமெங்கும் தடம் பதிக்கட்டும்



**செல்வன் கார்க்கி மெழுகுவர்த்திகள்**

எங்களிடம் ஐந்து வகையான மெழுகுவர்த்திகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

ஒவ்வொரு மாதமும் மெழுகுவர்த்தி செய்யும் முறை கற்றுத் தரப்படும்.






செல்வன் கார்க்கி குறுந்தொழிலகம்
மேலத்துலுக்கங்குளம்
மல்லாங்கிணறு – 626 109
கை பேசி : 936 312 5082.




# அனைத்திந்திய முற்போக்குப் பேரவை
## ( All India Progressive Forum )

அன்புடையீர்..!

வணக்கம்..!

அனைத்திந்திய முற்போக்குப் பேரவை என்ற அமைப்பு புதிதாக அகில இந்திய அளவில் தொடங்கப்பட்டுள்ளது.

☞ கல்வி – வேலை வாய்ப்பு – சுகாதாரம் – மருத்துவம் – பாதுகாப்பான குடி நீர் – சுற்றுச் சூழல் – புவி வெப்பமயமாதல் – அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி – சாதி – தீண்டாமை – சமத்துவமின்மை – மத வாதம் – பயங்கரவாதம் – பாலியல் வன்கொடுமைகள் – பாலின சமத்துவம் பெண்களின் உரிமைகள் – தேசிய இனப் பிரச்சனைகள் – நதி நீர்ப் பிரச்சனைகள் – தண்ணீர் கொள்கை – தேர்தல் சீர்திருத்தம் – விவசாயம் – தொழில் துறை – வர்த்தகம் – கலை – இலக்கியம் – பண்பாடு – அன்றாட சமூக நிகழ்வுகள்.... உள்ளிட்ட அனைத்துப் பிரச்சனைகள் குறித்து விவாதித்திடவும், அவற்றின் மீது சரியான கருத்துக்களை உருவாக்கவும், அக்கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும் அனைந்திந்திய முற்போக்குப் பேரவை தொடங்கப்பட்டுள்ளது.

☞ ஒவ்வொரு தனிநபரின் முழுமையான படைப்பாற்றலை வெளிக் கொணரவும், ஒவ்வொரு நபரின் தங்கு தடையற்ற சுதந்திரமான வளர்ச்சிக்கும் வாய்ப்பளிக்கும் சமூக அமைப்பை உருவாக்க இந்த அமைப்பு பாடுபடும்.

☞ இந்த அமைப்பில் இணைந்து செயல்பட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ஒன்றுபட்டுச் செயல்படுவோம்..! உன்னதமான சமூகத்தைப் படைத்திடுவோம்..!


இவண்


அனைத்திந்திய முற்போக்குப் பேரவை
41, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை – 600 0 43
செல் : 9940664343, 9444183776
Website : www.progressiveforum.in


**உறுப்பினர் கட்டணம் : ஆண்டுச் சந்தா ரூ.100. – மாணவர்களுக்கு ரூ.50**


Published & Owned by R. Sundararaj. Published from 4/255 Melathulukkangulam Mallanginar (Via) Virudhunagar ( Dt ) - 626 109. Editor's & Printer's R. Sundararaj

# இந்தியாவில் அதிகரிக்கும் ஏற்றத்தாழ்வு இடைவெளி




இந்தியாவில் வருமான ஏற்றத்தாழ்வு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவில் உள்ள 1 சதவீத பணக்காரர்களிடம் 58 சதவீத மக்களின் சொத்து குவிந்துள்ளது. உலகப் பொருளாதார மைய மாநாடு தொடங்கும் முன்பாக தன்னார்வ உரிமைகள் குழுவான **ஆக்ஸ்பாம்** இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள பணக்காரர்கள் மற்றும் ஏழைகளுக்கான இடைவெளி இதில் பட்டியலிடப்பட்டுள்ளது. இதில் இந்தியாவில் உள்ள 7 பெரும் பணக்காரர்களிடம் 21,600 கோடி டாலர் குவிந்துள்ளது. இது இந்தியாவின் 70 சதவீத மக்கள் வசம் உள்ள சொத்துக்களின் மதிப்புக்கு இணையானது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் முதல்நிலைச் செல்வந்தர்களின் பட்டியல் இது. சொத்து மதிப்பு அடிப்படையில் ‘ஃபோர்பஸ்’ பத்திரிகை வெளியிட்டது : முகேஷ் அம்பானி (ரூ.15 லட்சம் கோடி), திலிப் சங்வி (ரூ.11 லட்சம் கோடி), இந்துஜா சகோதரர்கள் (ரூ.10.1 லட்சம் கோடி), அசிம் பிரேம்ஜி (ரூ.10 லட்சம் கோடி), பல்லோன்ஜி மிஸ்திரி (ரூ.9.31 லட்சம் கோடி), லட்சுமி மிட்டல் (ரூ.8.37 லட்சம் கோடி), கோத்ரெஜ் குடும்பம் (8.31 லட்சம் கோடி), ஷிவ் நாடார் (ரூ.7.64 லட்சம் கோடி), குமார் பிர்லா (ரூ.5.89 லட்சம் கோடி), சைரஸ் பூனாவாலா (ரூ.5.76 லட்சம் கோடி). அனைத்து மக்களுக்கும் சென்றடையக் கூடிய பொருளாதாரத்தை உருவாக்குங்கள். ஒருசிலர் மட்டும் பயனடையும் பொருளாதாரத்தில் பயனில்லை என்று **ஆக்ஸ்பாம்** அறிக்கை குறிப்பிட்டுள்ளது. (நன்றி : ‘தொழிற்சங்க செய்தி’ பிப்ரவரி 2017 இதழ், 15.3.2017 தி இந்து தமிழ் நாளிதழ்).





பொதுவுடைமை அரசியல், பண்பாட்டு, இலக்கிய இதழ்.

**நிறுவனர் :**
**அமரர் பி.கே. சுப்பிரமணி**

**பயணம்**

**ஆண்டு நன்கொடை ரூ.100.**

**ஆலோசகர் குழு :** பா.உஷாராணி, சு.சுந்தரி, மீ.க. சுந்தர், பெ.அறிவுடைநம்பி, திலக், பாவலர்.கருமலைப் பழம் நீ, அ.ராஜா சொர்ணசேகர்.

**சட்ட ஆலோசகர் :** எம். சுப்புராம் B.Com., B.L., / உ. மகேந்திரன் M.Com., B.L.,

புகைப்படக் கலைஞர் : **M. சின்னராஜா B.B.A.**

**சந்தா, படைப்புகள் அனுப்ப முகவரி :** பயணம் இதழ், மேலத்துலுக்கன்குளம், மல்லாங்கிணறு (வழி), விருதுநகர் (மா) - 626109. பேச : 936 312 5082.

**சந்திப்பு முகவரி :**
பயணம் பதிப்பகம், 23 பேரூராட்சி வணிக வளாகம், மல்லாங்கிணறு

**ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் :** இரா. சுந்தரராஜ்.

வங்கி மூலம் பணம் அனுப்ப : **Name : R . SUNDARARAJ, A / C NO : 1092 188 3723**
**S B I, VIRUDHUNAGAR,IFSC : SBIN0000951.**

**படைப்பாளர்கள் கவனத்திற்கு :** படைப்புகளை புரபொசனல் கொரியரில் அல்லது சாதாரண அஞ்சலில் அனுப்பவும். ஒரு பிரதியை தங்கள் வசம் வைத்துக் கொள்ளவும். படைப்புகளில் (அவசியம் ஏற்பட்டால் மட்டும்) செய்யப்படும் சின்னஞ்சிறு மாற்றங்களை படைப்பாளிகள் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

4 தலையங்கம் / ஆசிரியர்
**உலகிலேயே அழகானது..!**

6 கட்டுரை / ‘தொழிற்சங்க செய்தி’ இதழிலிருந்து
**தமிழகத்தை தலை நிமிர வைத்த மெரினா போராட்டம்..!**

10 கட்டுரை / திலகவதி
**நாமும் நமது சினிமாவும்..!**

13 கட்டுரை / வ.கந்தசாமி, க. வசந்தா
**நட்சத்திரங்கள்..சூரியன்..பூமி..**

16 கட்டுரை / செம்மலர். மா. நடராசன்
**சனநாயகம்...!**

24 கட்டுரை / எஸ்.பி. ராஜேந்திரன்
**சோவியத் ஒன்றியம் எனும் கம்யூனிச பூதம்..!**

26 கட்டுரை / கரிசல்குளம் ஜோதிமதி
**பொதுவுடைமை போராளி V. இராமநாதன்**

30 கட்டுரை / எம். சிங்காரவேலு
**விஞ்ஞான நடைமுறையும்.. மூடநம்பிக்கையும்**

38 கட்டுரை / வீ.கி.அபனாசியெவ்
**கம்யூனிசம்**

**கவிதைகள்**

பாச்சுடர்
வளவ. துரையன்

புலவர்
இராம. வேதநாயகம்

பாவலர்
கருமலைத்தமிழாழன்

கவிமுகில்
பெ. அறிவுடைநம்பி

**பகத்சிங் மணிமொழிகள்**

பாவலர்
கருமலைப் பழம் நீ

**பயணம் குறித்த பார்வைகள்**

# உலகிலேயே அழகானது...!

**அ**ன்புமிக்க தமிழ் உள்ளங்களுக்கு..! வணக்கம்..!

இயற்கைக்கு அடுத்தபடியாக உலகிலேயே அழகானது எதுவென்று சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால் அது உழைப்பே ஆகும். அழகுகளையெல்லாம் படைத்ததும், படைக்க இருப்பதும் உழைப்பு என்பதால் “உழைப்பு ” ஒன்றே உலகில் அழகானதாகும்.

நகரங்களில் நம்மை பிரமிக்க வைக்கும் கட்டடங்களாகட்டும், அழகழகாய் காட்சியளிக்கும் பள்ளிக்கூடங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், வீட்டை அலங்கரிக்கும் கலைப் பொருட்கள், நீங்கள் அழகாய் இருக்கவேண்டும் என அணியும் ஆடைகள் என அனைத்தும் உழைப்பின் விளை பொருட்களேயாகும்.

இயற்கை இயற்கையாகக் கொண்டிருக்கும் செல்வங்களுக்கும், அழகுக்கும் அடுத்தபடியாக, உலகிலுள்ள செல்வங்கள், அழகுகள் அனைத்தையும் சொந்தம் கொண்டாட தகுதி படைத்தது உழைப்பேயாகும்..

ஏங்கெல்ஸ் உழைப்பு குறித்து கூறும்போது,
“ கைகள் உழைப்பிற்கான கருவி மட்டுமல்ல
உழைப்பின் விளைபொருளும் அதுவே ” என்றார்.

மனிதக் குரங்குகளின் முடி அடர்ந்த, நகம் வளர்ந்த, கரடு முரடான கால்களை ஒத்திருக்கும் கைகளுக்கும், இன்று கணினியில் நுணுக்கமான பணி புரியும் நமது கைகளுக்கும் இடையில்தான் எவ்வளவு வித்தியாசம்.

மனிதக் குரங்குகள் கம்புகளை எடுத்து மரத்திலிருந்த பழங்களை அடிக்காமல் இருந்திருந்தால், ஆதிகால மனிதன் கற்களையும், எலும்புகளையும் வைத்து மிருகங்களை எதிர் கொள்ள ஆயுதங்களைச் செய்யாமல் இருந்திருந்தால்... சுருக்கமாகச் சொன்னால் உழைக்காமல் இருந்திருந்தால் கவிதைகளும், கட்டுரைகளும், கதைகளும் எழுதும் அழகான கைகளும், மூளையும் நமக்குக் கிடைக்காமலேயே போயிருக்கும்.

உழைப்பின் போது மனிதன் இயற்கையின் மீது செயல்புரிந்து இயற்கையை செழுமைப்படுத்தும் அதே வேளையில், இயற்கை மனிதனுள் செயல்புரிந்து மனிதனையே செழுமைப்படுத்துகிறது. எனவே உழைப்பு என்பது வெறும் புற விசயமல்ல. இயற்கையையும் மனிதனையும் செழுமைப் படுத்தி, தனி மனிதனையும், குடும்பத்தையும், சமூகத்தையும் வளர்ச்சி நோக்கி உந்தித் தள்ளும் வாழ்வின் மிக உயர்ந்த உள்ளார்ந்த விசயம் உழைப்பாகும்.





பாலும் சகிப்பின்மையைக் கடைப் பிடிக்கும்.

**இன்பச் சமூகம் :** சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் உண்மையான இன்பத்துக்கு வகை செய்வது முதலாளித்துவத்தினால் முடியாது.

எந்தச் சமூகத்தில் மனிதனின் வருங்காலம் கேள்விக்குறியாக உள்ளதோ, எந்தச் சமூகத்தில் நம்பிக்கை இன்மையும், சோர்வு மனப்பான்மையும் மனிதனிடம் இடைவிடாமல் உடன் வருகிறதோ அந்தச் சமூகத்தில் மனிதன் இன்பம் உள்ளவனாக இருக்க முடியாது.

எந்தச் சமூகத்தில் தன் எல்லா உறுப்பினர்களுக்கும் போதுமான பொருள்வகை வசதிகள் அளிக்கப்படவில்லையோ, எந்தச் சமூகத்தில் கட்டாய உழைப்பு மேலோங்கி இருக்கிறதோ, எந்தச் சமூகத்தில் பெரும்பான்மையான மக்களால், தனக்கும் மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியும், நன்மையும் உண்டாகும் விதத்தில் பொருள்வகை, பண்பாட்டுச் செல்வங்களை பயன்படுத்த முடியவில்லையோ, அந்தச் சமூகத்தில் இன்பம் உள்ளவனாக மனிதன் இருக்க முடியாது.

சோசலிச கம்யூனிச சமூகத்தில் நிலைமை வேறானது. மனிதன்தான், அவனுடைய நலன்களும், தேவைகளும், அவனுடைய சர்வாம்ச வளர்ச்சியுமே சோசலிச சமுதாயத்தின் ஒரே குறிக்கோளாக இருப்பதால், கம்யூனிச அமைப்பில் தான் மனிதன் இன்பம் அடைவான்.

தனக்காகவும், மற்றவர்களுக்காகவும் உழைக்கவும், உலகப் பண்பாட்டுக் கருவூலத்தில் தனக்கான பங்களிப்பை நிகழ்த்தவுமான வாய்ப்பு, தனக்கு முன் உயர்ந்த குறிக்கோளை வைத்துக் கொண்டு அதை அடைவதற்கான வாய்ப்பு, பொருள் வகை வறுமையால் இருள் படியாத ஒளியுள்ள வருங்காலத்தில் நம்பிக்கை, தன் உடல், உளத் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு, இயற்கை சக்திகளையும், சொந்த சக்திகளையும் தனக்கும், மனித குலத்துக்கும் பயன்படுத்துகின்றவன் என்கிற உணர்வு, இவற்றிலேயே மனிதனுடைய உண்மை இன்பம் முதன்மையாக அடங்கி இருக்கிறது. கோடான கோடி மனிதர்களின் அறிவுகளையும், உள்ளங்களையும் கம்யூனிசம் ஆட்கொண்டு வருவதற்கான காரணம் இதுவே. உலகின் வெவ்வேறு பகுதிகளில் மேலும் மேலும் புதிய புதிய மனிதர்கள் கம்யூனிச ஆதரவாளர்களாகவும், அதன் பொருட்டு போராட முன்வந்து கொண்டிருப்பதற்கான காரணமும் அதுவே.

## அறிவிப்புகள்...

நூல் அறிமுகம் பகுதிக்கு நூலின் ஒரு பிரதி மட்டும் அனுப்பி வைக்கவும்.

மூலிகை மருத்துவம் பகுதி அடுத்த இதழில் வெளிவரும்.

படைப்புகள் அனுப்புவோர் ஒரு பிரதியை தங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.

அவற்றைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதே சமயம் மிகப் பெரும்பான்மையான மனிதர்கள் அனேகமாக அரசியல் உரிமைகள் அற்றவர்களாக இருக்கிறார்கள். தங்களது சித்தத்தை வெளியிட அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. உள்நாட்டு வெளிநாட்டு கொள்கையை நிர்ணயிப்பது இருக்கட்டும், அதனை அறியக் கூட வாய்ப்பு இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

மனிதர்களுடைய முழுமையான பொருளாதார, சமுதாய சமத்துவத்தை கம்யூனிசம் நிலைநாட்டும். இங்கே சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் திறமைக்கேற்ப உழைப்பார். தேவைகளுக்கு ஏற்ப பொருள், உளச் செல்வங்களை பெறுவார். கற்கவும், அறிவியல்களிலும், பண்பாட்டிலும் தேர்ச்சி பெறவும், எதார்த்தமான வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்கும். கம்யூனிச அமைப்பில் வர்க்கங்கள் இருக்க மாட்டா. மூளை வேலை செய்பவர்கள், உடலுழைப்பாளர்கள் என்று சமூக உறுப்பினர் பிரிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். அரசின் இடத்தில் இங்கே சமூகச் சுய நிர்வாகம் வரும். சமூகத்தின் செயல்களையும் அதன் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியையும் நிர்வகிக்கும் சமமான வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்.

**சகோதரத்துவம் :**

மனிதர்களுக்கும், மக்கள் இனங்களுக்கும் இடையே சகோதரத்துவத்தை முதலாளித்துவம் மறுக்கிறது. வேறு வகையாக இருக்கவும் முடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தின் அடிப்படையாக இருப்பது தனியார் சொத்துரிமை. இது மனிதர்களைப் பிரிக்கிறது. அவர்களைப் பகைவர்களாக்குகிறது. மூலதனத்தின், புனிதத்திலும் புனிதமான குறிக்கோளாகிய லாபத்துக்கான போராட்டத்தில் போட்டியாளர்களாகச் செய்கிறது. கடைக்கோடி தன்னலமே முதலாளித்துவ ஒழுக்க நெறியின் அடிப்படை கோட்பாடு ஆகும்.

கம்யூனிசச் சமூகத்தின் சொத்துரிமை, உழைப்பாளர்களை ஒன்று சேர்க்கும். சமூக வாழ்க்கையின் மிக வெவ்வேறான பிரச்சனைகளின் தீர்வில் அவர்களுடைய ஒற்றுமைக்கும், ஒருங்கிசைந்த பரஸ்பர தாக்கத்திற்கும் அது வழி வகுக்கும்.

கம்யூனிச சமூகத்தின் ஆக உயர்ந்த மனிதாபிமானம், மனிதர்களுக்கு இடையே நிலவும் சகோதர உறவுகளில் மட்டுமின்றி, எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளர்களின் சகோதர ஒருமைப்பாட்டிலும், பெரியவையும் சிறியவையுமான எல்லா அரசுகளுடைய மக்கள் மீதும் உள்ள மரியாதையில் வெளிப்படும்.

மக்கள் இனங்களுக்குள் பகைமையைப் பரப்பும் கொள்கையான தேசியவாதத்துடன் கம்யூனிசம் ஒருங்கே நிலவ முடியாது. உழைப்பாளி மக்களின் நட்பையும், சகோதரத்துவத்தையும் வலியுறுத்தும் கம்யூனிசம், தேசிய இன, மானிட இனப் பகைமையின் பாலும், உழைப்பாளிகளது பிரிவின்





துரதிருஷ்டவசமாக உடலுழைப்பை மட்டமாகக் கருதும் போக்கு சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனாலும் “வியர்வையில் விளையும் பொற்கனிகளாகிய செல்வங்களை” குனிந்து எடுத்துக் கொள்ளவோ அல்லது அபகரித்துக் கொள்ளவோ, உடலுழைப்பை மட்டமாகக் கருதுவோர் சிறிதும் வெட்கப்படுவதில்லை. உழைக்கும் மக்களின் உழைப்பில் விளையும் பொற்கனிகளாகிய செல்வங்களை எடுத்துக் கொள்ளும் / அபகரித்துக் கொள்ளும் உரிமை எனக்குள்ளதா உனக்குள்ளதா என்னும் போட்டியே தமிழக, இந்திய, உலக அரசியலாக இருந்து கொண்டிருக்கிறது..

உழைக்கும் மக்களின் உயர்வை, முதலாளித்துவத்தின் சுரண்டலை எழுதாமல், சினிமாக்காரர்களின், அரசியல்வாதிகளின், ஆளும் வர்க்கத்தினரின் பெருமைகளை கலர் கலராய் அச்சிட்டு மக்களை மயக்கத்திலும், பொய்மையிலும் மூழ்கடித்து வருகின்றன முதலாளித்துவப் பத்திரிகைகள்.

உழைக்கும் மக்களுக்கான தத்துவம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்லும் பணியில் பயணம் உங்கள் கரங்களில்...

தோழமை அன்புடன் ஆசிரியர்

**பிப்ரவரி 2017**
**சந்தா / வளர்ச்சி நிதி வரவுகள்**



| | | |
|---|---|---|
| 1. பாலகங்காதர திலகர் | விருதுநகர் | ரூ.100 |
| 2. M. அய்யப்பன் | மல்லாங்கிணறு | ரூ.100 |
| 3.செல்வன் எலெக்ட்டிரானிக்ஸ் | மல்லாங்கிணறு | ரூ.100 |
| 4.A. காசிலிங்கம் | கீழத்துலுக்கன்குளம் | ரூ.100 |
| 5.பா. ரஞ்சனி | மதுரை | ரூ.1000 |
| 6.கு.பஞ்சாட்சரம் | திருவண்ணாமலை | ரூ.100 |
| 7.எம்.பி. கனிவேல் | தலையூத்துப்பட்டி | ரூ.100 |
| 8.ஆல. தமிழ்ப்பித்தன் | புனல்வேலி | ரூ.100 |
| 9.ந. தேவகிருபை நடராஜன் | மல்லாங்கிணறு | ரூ.50 |
| 10. S. கிருஷ்ணராமானுஜம் | ஆண்டிபட்டி | ரூ.100 |

# தமிழகத்தை தலை நிமிர வைத்த மெரினா போராட்டம்...

அது ஒரு திருவிழா போல இருந்தது. "புரட்சி என்பது ஜனங்களின் திருவிழா" என்று மாமேதை லெனின் சொன்னதைக் காட்சிப்படுத்துவதாக இருந்தது. நமது மாநிலத்தில் நடக்கிறது என்று நம்பவே முடியாத நிலையில் இருந்தது. வெளித் தோற்றங்கள் எவ்வாறு மாறியிருப்பினும், மனித உள்ளங்களில் பண்பாடு என்பது எப்படி வேர்பிடித்து நிற்கிறது என்பதைக் காட்டுவதாக இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக "என்னைவிட என் மகன் / மகள் புத்திசாலியாகவே இருப்பார்கள்" என்ற இயற்கையின் கோட்பாட்டை எடுத்து வைப்பதாக இருந்தது.

போராடியவர்களில் ஆயிரத்தில் ஒருவர் – ஏன் பத்தாயிரத்தில் ஒருவர் கூட – ஜல்லிக்கட்டை நேரில் பார்த்திருக்க முடியாது. ஜல்லிக்கட்டு என்பது ஒரு அடையாளம் மட்டுமே. தமிழகத்துக்கு வரும் ஆறுகள் எல்லாம் அடைக்கப்பட்டு நீர் உரிமை மறுக்கப்படுவது, கருகிய பயிர்களோடு சேர்ந்து விவசாயிகளும் கருகுவது, நாள்தோறும் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டும் எதிர் நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாதது, தமிழில் கற்கவும், வாதாடவும், வழிபடவும் கூட முடியாத சூழல் ஏற்பட்டிருப்பது, தமது பணத்தை எடுப்பதற்கே வங்கி முன் வரிசைகட்டி நிற்பது, படிக்கவும் வேலை கிடைக்கவும் என எதைத் தொட்டாலும் லஞ்ச லாவண்யம் பெருக்கெடுத்து ஓடுவது, அதிகார வர்க்க ஆணவத்தின் முன்பு தனிமனித கௌரவமும், உரிமைகளும் தூசிலும் கேடாக கேவலப்படுத்தப்படுவது போன்ற வாழ்வியல் உணர்வுகளின் கொதிப்பில் உடைப்பெடுத்த பெருவெள்ளமே இது.

தமிழ்ச் சமூகத்தில் நீண்ட காலமாக சுவர் எழுப்பித் தடுக்கப்பட்டிருந்த ஆண், பெண் வேறுபாடு இதில் நொறுங்கிப் போனது. இன்றும் வேதனைப் படுத்தும் சாதிப் பாகுபாடு ஒதுங்கி நின்றது. வயதை முன்னிறுத்தும் போலி மரியாதைகளும் கூச்சங்களும் ஒடுங்கிப் போயின. இதுதான் இலக்கு, இதை நோக்கியே பயணம் என்னும் உறுதிப்பாடு 1940 க்கும், 1960 க்கும் பின்பு இப்போதுதான் இறுகி நின்றது.

இன்றைய அரசியல் அமைப்பின் மீது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் நம்பிக்கை இழந்திருக்கின்றனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அரசியலே வேண்டாம் என்று அவர்கள் கருதுவதாக ஊடகங்கள் தமது கருத்தை இளைஞர்கள் மீது ஏற்றுகின்றன.

உலகமயத்துக்கு எதிர்ப்பு, கார்ப்பரேட் எதிர்ப்பு, உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவு, மாநில உரிமைகளுக்குப் பாதுகாப்பு, மத்திய அரசின் அதிகாரக்





**கம்யூனிசம் என்பது விடுதலை :**

முதலாளித்துவச் சமூகத்தில் விடுதலை பற்றி நிறையப் பேசுகிறார்கள். கட்டற்ற தொழில் முயற்சிக்கும், சந்தையில் கட்டற்ற வியாபாரத்துக்கும் உள்ள உரிமையுடன் இந்த விடுதலை தொடர்புடையது என முதலாளியக் கொள்கைவாதிகள் சொல்லுகிறார்கள். ஆனால் சந்தையில் கட்டற்ற வியாபாரம் என்பது பொய். ஏனென்றால் தொழிலதிபரும் சரி, தொழிலாளியும் சரி, எண்ணற்ற இன்றியமையாமைக்குக் கீழ் (கட்டற்ற தொழில் முயற்சி நிலவும் சமூகத்துக்கு இயல்பான அராஜக போட்டிகளுக்கு) கட்டுண்டு கிடக்கிறார்கள்.

மனிதர்கள் உண்மையான விடுதலை பெறுவதற்கான எதார்த்த வாய்ப்பு சோசலிச அமைப்பில்தான் ஏற்படுகிறது. சமூகச் சொத்துரிமையின் ஆதிக்கமும், சமரசப்படுத்த முடியாத வர்க்க முரண்பாடுகளின் நீக்கமும் சந்தையின் ஒழுங்கீனத்தை போக்கிவிடுகின்றன. சமூகத்தின் பொருளாதார, அரசியல், பண்பாட்டு வாழ்க்கையை உணர்வுப் பூர்வமாக வழிகாட்டி நடத்தும் வாய்ப்பை மனிதர்கள் பெறுகிறார்கள். சமூகம் மேற்கொண்டு முன்னேற முன்னேற, தனி மனித சுதந்திரம் மேலும் மேலும் விரிவும், பல்வகைப்பாடும் அடைந்து கொண்டு போகிறது. இயற்கைச் சக்திகள் மீதும், சமூக நிகழ்முறைகள் மீதும் மனிதனின் செயலூக்கம் அதிகரிக்கிறது. தனது சொந்த நலன்களையும், விருப்பங்களையும் உயர்ந்த சமூகக் குறிக்கோளுடன் இணைக்க (தானே விரும்பி உணர்வுப் பூர்வமாக இணைக்க) மனிதன் கற்றுக் கொள்கிறான்.

**முதலாளித்துவம் :**

முதலாளித்துவம் என்பது முதன்மையாக ஆழ்ந்த பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகும். இதில் சமூகத்தின் மிகச் சிறு பகுதி, சமூகச் செல்வங்களின் மிகப் பெரும் பகுதியை உடைமையாகப் பெற்றிருக்கிறது. ஆடம்பரங்களில் மூழ்கிக் கிடக்கிறது. உலகின் எல்லாச் செல்வங்களும் யாருடைய உழைப்பால் உண்டாக்கப்படுகின்றனவோ அந்தப் பெரும் பகுதியினரை, மிக மிக அடிப்படையானத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாதவர்களாக சமூகம் வைத்திருக்கிறது.

பிரம்மாண்டமான பொருள், செல்வங்களை முதலாளித்துவம் உருவாக்கி இருக்கிறது. ஆனால் அவற்றை நியாயமாக பகிர்ந்தளிக்க, எல்லோருக்கும் உரியவை ஆக்க அதனால் முடியவில்லை. உற்பத்தி சாதனங்களை உடைமையாகப் பெற்றிருப்பவர்கள் அரசியல் அதிகாரத்தையும், மனிதர்களுடைய மூளையின் மீது தாக்கம் நிகழ்த்துவதற்கான அச்சக வெளியீடுகள், வானொலி, தொலைக்காட்சி, இலக்கியம், கலை முதலிய சாதனங்களையும் தங்கள் கைகளில் திரட்டிக் குவித்துக் கொண்டு, தங்கள் பொருளாதார ஆதிக்கத்தையும், அரசியல் அதிகாரத்தையும் நிலை நிறுத்திக் கொள்ளவும், பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வை நிரந்தரமாக்கவும்



# கம்யூனிசம்

## மனிதகுலத்தின் ஒளிமிக்க வருங்காலம்

– வீ.கி. அபனாசியெவ் –

**ச**மாதானம், உழைப்பு, விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம், இன்பம் ஆகியவற்றை மனித குலத்துக்கு “ கம்யூனிஸ்டுகள் ” பிரகடனம் செய்கிறார்கள்.

முதலாளித்துவம் யுத்த அபாயம் நிறைந்தது. 19 ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் ஏகாதிபத்திய வாதிகள் மனித குலத்தை உலகயுத்த இரத்த வெள்ளத்தில் இரண்டு தடவைகள் ஆழ்த்தினார்கள்.

மக்கள் இனங்களுக்கும், அரசுகளுக்கும் இடையே நிலவும் உறவுகளில் புதிய சகாப்தத்தை சோசலிசம் தொடங்கி வைத்திருக்கிறது. பரஸ்பர நம்பிக்கையும், மரியாதையும், பிரதேச முழுமை, பொருளாதார, அரசியல் சுதந்திரம், பிறநாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றை சோசலிசம் வலியுறுத்துகிறது.

புதிய உலக யுத்தத்தை மூட்டி விடும் ஏகாதிபத்தியவாதிகளின் வழியில் உள்ள பெருத்த தடையாக நிற்கும் பொருள்வகை, அரசியல் சக்தியாக சோசலிசம் விளங்குகிறது. மனிதகுலம் கம்யூனிசத்திற்கு பரிணமித்ததும் நிலையான சமாதானம் ஏற்பட்டுவிடும். உலக மாந்தர்கள் தங்கள் வருங்காலம் பற்றிய கவலையிலிருந்து என்றென்றைக்கும் விடுபட்டுவிடுவார்கள்.

**உழைப்புச் சமூகம் :** முதலாளித்துவம் உழைப்பைத் தாங்க முடியாத கட்டாயக் கடமையாக, வயிற்றுப்பாட்டுக்கான சாதனமாக மாற்றியிருக்கிறது. பட்டினி பற்றிய அச்சம் முதலாளிக்காக முதுகு ஒடிய உழைக்கவும், தன் உடல், உளச் சக்திகளைக் கடைசித் துளிவரை செலவிட்டுப் பாடுபடவும் தொழிலாளியைக் கட்டாயப்படுத்துகிறது.

இதற்கு மாறாக, மனிதச் செயலின் எந்தத் துறையில் வேண்டுமானாலும் உழைக்கவும், படைக்கவும் உழைப்பாளிகளுக்கு விரிவான உரிமை அளிக்கிறது சோசலிசம். மனிதனை மனிதன் சுரண்டுவதை அடியோடு ஒழித்துவிட்டு, நிலப்பிரபுக்காகவோ, முதலாளிக்காகவோ இன்றித் தங்களுக்காக, தங்கள் மக்களுக்காக, தங்கள் சமூகத்துக்காக வேலை செய்வதற்கான முழு வாய்ப்பை உழைப்பாளி மக்கள் இங்கே பெறுகிறார்கள். விஞ்ஞானம், தொழில் நுட்பத்தின் அதிநவீனமான சாதனைகளை அடிப்படையாகக் கொண்ட உழைப்பு, கம்யூனிசச் சமூகத்தில் உண்மையாகவே கட்டற்றதாகவும், படைப்புத் தன்மை கொண்டதாகவும், மனிதனது முதலாவது வாழ்க்கைத் தேவையாகவும் மாறி, மனிதனின் சர்வாம்சமான ஒருங்கிசைந்த வளர்ச்சியின் அடிப்படையாகவும் உழைப்பு விளங்கும்.





குவிப்புக்கு எதிர்ப்பு உள்ளிட்ட முழக்கங்கள் அவர்களிடமிருந்து வெளிப்பட்டன. இவையெல்லாம் இடதுசாரிகள் ( மட்டுமே ) எழுப்பும் பிரச்சனைகளாகும். கம்யூனிஸ்டுகள் அண்மைத் தேர்தல்களில் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்திருந்தாலும், அவர்கள் முன்வைத்த அரசியல் உயிரோடும், பேரெழுச்சியை உருவாக்கும் உயிர்ப்போடும் இருக்கிறது என்பது எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையை அதிகப்படுத்துகிறது.

ஒரே நாளில் அவசரச் சட்டம், நான்கு நாட்களில் நிரந்தரச் சட்டம் என்ற நடைமுறைச் சாத்தியமில்லாத நிகழ்வை இந்தப் பேரெழுச்சி நிகழ்த்திக் காட்டியிருக்கிறது. இந்தப் பேருண்மையை போராட்டக்காரர்கள் புரிந்து கொண்டு அந்தப் பெருவெற்றியைக் கொண்டாடுவதற்கு வாய்ப்பளிக்கக் கூடாது என்பதற்காகவே, மத்திய மாநில அரசுகள் காவல்துறை மூலமாக ஒரு கொடூரமான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டன. இது கடுமையான கண்டனத்துக்குரியது.

தமிழகத்தை அலட்சியப்படுத்த முடியாது என்பதை டெல்லிக்காரர்களுக்கும், தமிழக மக்களை அலட்சியப்படுத்த முடியாது என்பதை தமிழக அதிகார அரசியலுக்கும் ஆணி அடித்துச் சொல்லியிருக்கிறது இப்பேரெழுச்சி– வாழ்க..!

நன்றி : தொழிற்சங்க செய்தி மாத இதழ், கே.டி.கே. தங்கமணி இல்லம், 2/1, கோவூர் வைத்தியநாதன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை ,சென்னை – 2

## இன்னும் அடிமைகள்...

பாச்சுடர். வளவதுரையன்

**தொ**லைக்காட்சி காட்டுகின்ற ஆடலுக்கும் பாடலுக்கும்
விலையாகிப் பெட்டி முன்னே வீணாக அடிமையானோம் ;
காலையிலே தாள் காட்டும் கற்பழிப்பு கடத்தல்கள்
கொலை கொள்ளை செய்திகட்கே அடிமையானோம் ;
அன்பெனுமோர் குணம்விட்டே ஆசைஎனும் பேயினுக்கே
என்புவிற்றும் பணம்சேர்க்க எல்லாரும் அடிமையானோம் ;
ஊழல்கள் பல புரிந்தும் உத்தமர்கள் போல்நடிக்கும்
பாழ்பட்ட அரசியலார் பாதைகட்கே அடிமையானோம் ;
சாதியினால் அனைத்தையும் சாதிக்க முடியுமென்ற
நீதிகெட்ட நெறிமுறைக்கே நித்தமும் அடிமையானோம் ;
தாய்மொழியாம் அருமைமிகு தமிழிருக்க ஆங்கிலத்தில்
வாய்கிழியப் பேசுகின்ற வழக்கத்திற் கடிமையானோம் ;
எப்படியும் தன்செயலை எவ்விடத்தும் முடிப்பதற்கே
தப்பான கையூட்டு தருவதற்கே அடிமையானோம் ;
நன்றான சுதந்திரத்தை நாமிங்கு பெற்றாலும்
இன்னுமிங்கே அடிமைகளாய் இருப்பதுவும் நன்றாமோ..?


# புதுக் காலை..!

– புலவர் இராம. வேதநாயகம் –

**பு**ள்ளினமும் பூவினமும் புதுக்காலை நேரமிதில்
புத்தெழுச்சி புத்துணர்வு பூத்திடவே தோன்றுங்காண்..!
துள்ளும் நல் மானினமும் தோகையுடை மயிலினமும்
துயில்துறந்து மகிழ்வாக ஏற்றமுடன் தோன்றுங்காண்...!
உள்ளமெல்லாம் அழகாக உன்னதமாம் பெண்டிர்தாம்
ஒய்யாரக் கோலங்கள் உணர்வள்ளித் தோன்றுங்காண்..!
கள்ளமேதும் அறியாத கனிமழலைச் செல்வங்கள்
கண்விழித்துப் பார்க்கின்ற காட்சிகளே தோன்றுங்காண்..!

தென்றல்போல் இதக்காற்று தேசுபுகழ் இளவெய்யில்
தெம்மாங்குப் பாட்டிசைத்துக் கொழுந்தெல்லாம் தோன்றுங்காண்...!
அன்றாடம் உழைக்கின்ற அரைவயிற்றுக் கஞ்சியர்கள்
அரை நிர்வாண உழவர்கள் அடிவைத்தல் தோன்றுங்காண்...!
குன்றாத உழைப்பாலே குன்றெனவே நிமிராத
குவலயத்தின் தூண்களாகும் பாட்டாளி தோன்றுங்காண்...!
நின்றாடா அலைமகளும் நேர்த்தியுடன் தம்பணியை
நித்தநித்தம் புரிகுவதுவோ நினைவலையாய்த் தோன்றுங்காண்..!

ஆலயங்கள் மணியோசை ஆர்ப்பரிப்பே இல்லாமல்
ஆன்மிகத்தில் அமைதியுடன் அளித்திங்கே தோன்றுங்காண்...!
கூலமகன் கண்ணாகக் கொஞ்சமுமே மாற்றமின்றிக்
கொடுத்துவாங்கும் முறைக்காகப் போவதுமே தோன்றுங்காண்...!
காளைகளும் கன்னியரும் கருத்தாகத் தம்பணியைக்
கலையாகப் புரிந்திடவே கண்பார்த்தல் தோன்றுங்காண்...!
நாளதுவும் மெல்ல மெல்ல நகர்வதைப்போல் இயக்கமெலாம்
நன்றியுடன் நகர்ந்திங்கே நடப்பதுவும் தோன்றுங்காண்...!



## நூல் அறிமுகம்..!

மனோன்மணி காட்டும் ஊழிக்காலம்

( நாவல் )

ஆசிரியர் : செ. கணேசலிங்கன்

வெளியீடு : குமரன் பப்ளிஷர்ஸ்
12/3, மெய்கை விநாயகர் தெரு
வழி : குமரன் காலனி 7 வது தெரு
வடபழனி, சென்னை – 600 026.

பக்கங்கள் : 176. விலை ரூ. 70





# ஆவணப்படுத்துவதில் நமக்கு ஏன் அக்கறை இல்லை..?

**ஒ**ரு சமூகத்தின் மிகச் சிறந்த ஆவணக் காப்பகம் நூலகம்தான். நூலகம் பல தலைவர்களை உருவாக்கியிருக்கிறது. குற்றவாளிகளைச் சீர்திருத்தியிருக்கிறது. விஞ்ஞானிகளைப் பட்டை தீட்டியிருக்கிறது. அறிவுச் சுரங்கமாக இருப்பதோடு, வரலாற்றை ஆவணப்படுத்தும் இடமாகவும் நூலகங்கள் இருந்து வந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் அத்தகைய நூலகங்களின் நிலை இன்று பரிதாபத்திற்குரியது.

இந்தியாவைப் பொறுத்தவரை, சென்னையில் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்தது கன்னிமாரா நூலகம். நாட்டில் உள்ள நான்கு ‘ தேசியக் களஞ்சிய நூலகங்களில் ’ இதுவும் ஒன்று. இந்தியாவில் பதிப்பிக்கப்படும் நாளிதழ்கள், மாத, வார இதழ்கள், புத்தகங்கள் ஆகியவற்றின் ஒரு பிரதியை வாங்கி ஆவணப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த நூலகத்துக்கு உண்டு. ஆனால் அந்த நூலகம் அந்தப் பொறுப்பை சரிவரச் செய்கிறதா..? பதில் எதிர்மறையாகத்தான் இருக்கிறது. 1967 – ம் ஆண்டு முதல் 2001 வரை, தமிழிலும் வெளியான பத்திரிகை “ யுனெஸ்கோ கூரியர் ”. இந்த இதழை, பெரும்பாலான நூலகங்களில் தேடினால் கிடைப்பதில்லை.

இன்று இந்தியாவில் பதிப்பிக்கப்படும் புதிய புத்தகங்களில் எத்தனை புத்தகங்கள் இந்த நூலகத்தில் இருக்கின்றன என்பதும் சந்தேகத்துக்குரியது. கூடவே, பதிப்பகங்கள், நூலாசிரியர்கள், இதழ்களும் கூட தங்கள் புத்தகங்கள், இதழ்களின் பிரதிகளை நான்கு தேசியக் களஞ்சிய நூலகங்களுக்கும் அனுப்புவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

எந்த இதழ்களை வாங்குவது, எந்தப் புத்தகத்தை வாங்காமல் இருப்பது என்பதெல்லாம் நூலகத்தின் நிர்வாக முடிவு என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் கூட, தற்போது பல அரசு நூலகங்களில் உள்ள இதர ஆவணங்களாவது பத்திரமாக பராமரிக்கப்படுகின்றனவா என்றால் அதுவும் சந்தேகம்தான். ஒட்டடை பிடித்த கூரைகள், போதிய வெளிச்சமில்லாத அறைகள், தூசி படிந்த மேஜைகள், மழையில் நனைந்து நைந்து போன புத்தகங்கள் என்று மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளன பல நூலகங்கள்.

நூலகங்களின் நிலை இப்படி என்றால், தமிழ்நாடு மாநில ஆவணக் காப்பகத்தின் நிலை இன்னும் மோசம். அந்தக் காப்பகத்தின் வராந்தாவில், வீடுகளில் துணி உலர்த்துவதற்கான கயிறு கட்டியிருப்பது போல, கயிறுகள் கட்டப்பட்டிருக்கும். அதிர்சியடையக் கூடாது. மழைக் காலங்களில் ஆவணங்கள் நனைந்துவிட்டால், அவற்றை உலர்த்துவதற்குத்தான் இந்தக் கயிறுகளாம்..!

நிதிப் பற்றாக்குறை, ஆள் பற்றாக்குறை, இடப் பற்றாக்குறை என நூலக, ஆவணக் காப்பக நிர்வாகிகள் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றை எல்லாம் கடந்து, தீர்வுகளைத் தேடுவதுதான் அழகு. புத்தகங்களை சேகரிப்பது ஒவ்வொருவரின் விருப்பம். ஆனால் ஆவணப்படுத்துதல் என்பது அடிப்படையில் அரசின் கடமை அல்லவா..!

– நன்றி : தி இந்து தமிழ் நாளிதழ் பிப்ரவரி 25, 2017 –

இருந்தால் சுடர் அசைவற்று எரிகிறது. காற்று அடித்தால் அசைகிறது. ஆதலின் அசைவுக்கும், அசையா தன்மைக்கும் காற்றே காரணம். இதற்கு எந்த அம்மன் தயவும் வேண்டுவதில்லையே. இந்தப் பித்தலாட்டங்களைச் செய்யும் பூசாரிகளையும், அவர்கள் சொல்வதைக் கேட்கும் பாமர மக்களையும் ஒன்று கேட்கின்றோம். அதாவது காற்றடிக்கும் அறைகளில் அதாவது ஜன்னல்களுக்கு எதிரிலாகிலும், வாசல்களிலாகிலும், தெருக்களிலாகிலும், தீபத்தை குத்து விளக்கில் ஏற்றி அதன் சுடரை அசைவற்று நிற்கும்படி செய்யுங்கள் பார்ப்போம்..? என்ன நீங்கள் உரத்து அம்மனை வர்ணித்தாலும் அந்த அம்மன் சுடரில் நுழையவே மாட்டாள்..! இந்தத் தந்திரத்தை அறிந்த பூசாரி கூடத்து மூலையிலும், காற்றடிக்காத அறையிலுமே சுடரை எரியப் பார்ப்பான். இதுதான் பூசாரிகள் செய்துவரும் மந்திரம்.

குறிப்பு : மூடநம்பிக்கைகளை விஞ்ஞானப் பூர்வமாக ஆய்வு செய்யும் இது போன்ற கட்டுரைகளை “விஞ்ஞான முறையும், மூட நம்பிக் கையும்” என்னும் தலைப்பில் 1934ல் நூலாக வெளியிட்டிருக்கிறார் தோழர். எம். சிங்காரவேலு அவர்கள். அந்நூல் **N.C.B.H.** மூலம் 2012 ல் மீண்டும் அச்சிடப்பட்டுள்ளது. **N.C.B.H.** க்கு பயணம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## இனம்..

**அ**கமும் புறமும் என
வாழ்க்கை நெறி
வகுத்து வாழ்ந்த இனம்.

கங்கை கொண்டான்
கடாரம் வென்றான் என்று
வரலாறு படைத்த இனம்.

வேங்கையை முறத்தால்
விரட்டியடித்த வீர மங்கை
பிறந்த இனம்.

பார் போற்றும் பண்பாடும்
இலக்கியச் செல்வமும்
நிரம்பப் பெற்ற இனம்.

பசுவின் கன்றுக்காக
மகனையே பலியிட்டு
நீதியை வாழ்வித்த இனம்.

முல்லைக்கு தேர் தந்து
மயிலுக்குப் போர்வை தந்து
புறாவுக்கு தசை தந்து
மகத்துவம் கண்ட இனம்.

பிறப்பொக்கும்
எல்லா உயிர்க்கும்...
யாதும் ஊரே
யாவரும் கேளீர்... என
உலகுக்கு உரைத்த இனம்.

அறம் செய விரும்பிய,
வாடிய பயிரைக்
கண்டபோதெல்லாம்
வாடிய இனம்.

கொலை வாளினை எடடா
கொடியோர் செயல் அறவே
என்ற இனம்.

நடுக்கடலில்
சுடப்பட்டு வீழ்வதை எண்ணி
தூக்கம் தொலைக்குது மனம்.

– பெ. அறிவுடைநம்பி –





## விதையொன்று நட்டு வைப்போம்


– பாவலர். கருமலைத்தமிழாழன் –

**கு**ழந்தையாக உலகில் நீ பிறந்த போது
குறுவுடலைத் தாங்குகின்ற தொட்டி லானேன்
அழகாக சிரித்துநீயும் மகிழ்வ தற்கே
அருமையான பொம்மைகளாய் வீற்றி ருந்தேன்
பழகுவதற்குக் காலெடுத்து வைப்ப தற்குப்
பக்கத்தில் நடைவண்டி யாக நின்றேன்
சுழன்று நீயும் பள்ளிக்குச் செல்லும் போது
சுடரெழுத்தை எழுதுதற்கும் சிலேட்டாய் வந்தேன்..!

படிக்கின்ற போதுசாய்வாய் அமர்வ தற்குப்
பக்குவமாய் நாற்காலி யாக நின்றேன்
குடிப்பதற்குக் குளம்ஏரி நிரம்ப மேகம்
குளிர்வித்து மழைபொழிய உதவி செய்தேன்
விடுத்திழுக்கும் மூச்சிற்குக் கலந்தி ருக்கும்
விடந்தன்னைத் தூய்மை செய்து காற்றைத் தந்தேன்
எடுத்துண்ண சுவையான காய்ப ழுங்கள்
எழிலுடற்கு மருந்திலைகள் தினம்கொ டுத்தேன்..!

வாழ்க்கையினைத் தொடங்குதற்குக் கட்டி லாக
வாழ்வீட்டைத் தாங்குகின்ற தூண்க ளாக
வாழ்விறுதிப் பாடையாக உடனி ருந்தே
வளம்தந்து மண்ணிற்குள் புதைத்த போதும்
காழ்ப்பேறி வைரமாகப் பயனை நல்கும்
கண்ணான மரமென்னை வெட்டிக் கீழே
வீழ்த்துமுன்பு விதையொன்றை நட்டு வைத்தால்
விளைந்து நாளை வாழவைப்பேன் உன்னைக் காத்தே..!

பகவான் ஸ்ரீரமணா மகரிஷி –திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமம் அறக்கட்டளை வழங்கிய நன்கொடையில் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் கட்டப்படும் நூலகம்.



# நாமும் நமது சினிமாவும்...

- திலகவதி -

**சி**னிமா என்கிற விபரீதம் வேறு எந்த நாட்டைக் காட்டிலும் நம் நாட்டைத்தான் மிக அதிகமாக பீடித்திருக்கிறது. படைப்புத் திறனும், அறிவியல் தொழில் நுட்பமும் இணைந்து தோன்றிய கலை சினிமாக் கலை. கவிதை, கதை, நாடகம் என்று மனிதர் தோற்றுவித்த கலைகள் பல ஆயிரம் பெயருடையவை. சினிமா மட்டும்தான் நம் தலைமுறையில் பிறந்த கலைக் குழந்தை. அதை வளர்க்கத் தெரியாமல் வளர்த்து வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு மலையாளி, ஒரு வங்காளி, ஒரு தமிழன் ஆகியோர் சினிமா பார்க்கப்போனார்கள். பார்த்துவிட்டுத் திரும்பும்போது மலையாளி சினிமாவின் கதையைப் பற்றி பேசிக்கொண்டு வந்தான். வங்காளி அந்த சினிமா சொல்லும் வாழ்க்கையைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தான். தமிழன் அந்த சினிமாவின் கதாநாயகன் எப்பொழுது அரசியலுக்கு வருவான் என்று கேட்டுக் கொண்டு வந்தான். தமிழருக்கும், சினிமாவுக்கும் உள்ள உறவு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

சோப்பு விளம்பரங்கள், நடிகைகளின் அழகு தங்கள் சோப்பால் தான் வந்தது என்று கூறுகின்றன. அழகு சாதன சோப்பு என்று சொல்லியும், என் மேனியழகைக் காப்பது அந்தச் சோப்புதான் என்று ஒரு நடிகையும் சத்தியம் செய்வதை இன்றுகூட நாம் காண முடியும். " இரத்தக் கண்ணீர் " திரைப்படம் வெளிவந்தபோது பெண்கள் சிவப்பு சேலை அணிந்தார்கள். 50 - களில் ' சரோஜா ' என்கிற பெண்குழந்தை சினிமாவில் நடித்து தமிழர் உள்ளங்களை கொள்ளை கொண்டாள். அக்காலத்ததில் பிறந்த பெண் குழந்தை களுக்கெல்லாம் ' சரோஜா ' என்று பெயர் சூட்டி அழைத்தனர். நெற்றிப் பொட்டிலிருந்து புடவை பார்டர் வரை, ஆண்களின் கிராப்புத் தலையிலிருந்து சட்டை பேண்ட் வரை சினிமா தன் செல்வாக்கைச் செலுத்திக் கொண்டுள்ளது. ஒரு காலத்தில் பாகவதர் கிராப்புக்கு இருந்த மௌசு ரஜினி கிராப்புக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் இரண்டு நடிகர்களின் போஸ்டர்கள் மேல் சாணியடித்துத் தங்கள் விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்கள். படம் பார்க்க வந்த ரசிகப் பெருமக்களுக்கு, தியேட்டர் வாசல்களில் நின்று கொண்டு குங்குமம், பூ, பிரசாதம், இனிப்பு வழங்கிக் கொண்டிருந்தன ரசிகர் மன்றங்கள். நடிகர்களின் பெயரால் அகில உலக ரசிகர் மன்றங்கள் உருவாகி நடிகர்கள் வழிபாட்டுப் பொருள்களாக மாற்றப்பட்டார்கள்.

சினிமா என்பது வாழ்க்கையைச் சொல்லும் ஒரு ஊடகம். வாழ்க்கையை தான் பார்த்த விதத்தில், தாம் கண்டுணர்ந்த உண்மையைச் சொல்லுவதற்காக ஒரு இயக்குநர் படம் எடுக்க வேண்டும். உலகம் முழுவதும் இதுதான் நியதியாக இருக்கிறது.





எரியும் சுடரை அந்த அம்மன் இந்த அம்மன் என்று வர்ணித்து இதைச் சொல்லம்மா, அதைச் சொல்லம்மா என எரியும் சுடருடன் பேசுவதைப் போல் நடித்து, சுடர் அசையாமலிருந் தால் ' அம்மா உத்தரவு அளிக்க வில்லை ' என்றும், அசைந்தால் 'அம்மா உத்தரவு கொடுத்தாளென வும் ' அர்த்தப்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றும் விதம் ஒன்று உண்டு. இதுவும் ஒரு ஜீவன உபாயமென அறிக. கிராமாந்திரங்க ளில் ஏழைகள் நோய்வாய்ப்பட்டால் இம்மாதிரியான மூடப்பழக்க வழக்கங்களைக் கொண்டு நிவர்த்திக்கப் பார்க்கின்றார்கள். இதனுடைய ஆபாசத்தை (Absurdity) சற்று விளக்கிப் பார்க்க வேண்டும். கோடான கோடி தீபங்கள் எரிகின்றன. அசையாத தீபங்களும் தற்காலத்தில் பார்க்கின்றோம். அதாவது மின்சார (Electric ) தீபங்கள். இந்தத் தீபச் சுடர்கள் காற்றிலும் அசைவதில்லை. காற்றில்லாமல் போமாகில் சுடர் அசைவற்று எரியும். காற்று வீசியதும் தீபச் சுடர்கள் அசைவதைப் பார்க்கலாம். இந்தச் சுடர்கள் அசேதனங்கள், அதாவது உயிரற்றவை நமது சொல்லுக்கு அடங்காதவை, நமது சொல்லையும் கேட்க முடியாதவை. நமது காலில் மிதிபடும் கல்லுக்கும், விளக்கில் எரியும் தீபச் சுடர்களுக்கும் மேற்கண்ட விசயங்களில் வித்தியாச மில்லை. அப்படியிருக்க எவ்விதம் சுடர்களுடன் பேசக் கூடுமோ நமக்கு விளங்கவில்லை. பைத்தியம் பிடித்தவர்கள்தான் சுடருடனும், சுவருடனும், செடி, மரங்களுடனும் பேசுவார்கள். இந்த விசயத்தை யோசியாமல் விளக்கு வைத்துப் பார்த்து அத்துடன் பேசுவதென்றால் என்ன மூடத்தனம் என்று எண்ண வேண்டும்...? பூசாரிதான் அவன் ஜீவனத்திற்கு மோசம் செய்கின்றான். பஞ்சறிவுடைய ஏழை மக்கள் அவன் பித்தலாட்டத்திற்கு ஏமாந்து, அவன் பிதற்றுவதைக் கேட்டு அவனை நம்புவதென்றால் என்ன மதிமோசம். விளக்கில் அம்மனோ சாத்தானோ, சனியனோ புகுந்து கொண்டு பூசாரி கேட்பதற்கெல்லாம் விடை கொடுப்பதாகச் சொன்னாலும் முன் நம்பிக்கையைவிட இது நம்பத் தகாதது. அதனினும் ஆபாசமே யாகும்.

தீபச் சுடர்களை காற்றடிக்காத அறைகளில் எரிய வைத்து நமக்கு வேண்டியபடி தீபச் சுடரை அசைய வைக்கலாம். திருஷ்டாந்தமாக இதனை யாரும் பரீட்சித்துப் பார்க்கலாம். காற்றடிக்காத கூடத்து அறையில் விளக்கை ஏற்றி அதன் அருகே உட்கார்ந்து கொண்டு காற்றை மெதுவாக வாயின் மூலமாக இழுத்தால் சுடர் அசைவற்று நிற்கும். அது நமது இஷ்டப்படி அசைய வேண்டுமானால் கையை ஆட்டினாலும் அல்லது மெதுவாக ஊதினாலும் தீபச் சுடர் அசையும். இவ்வித சலனமற்ற நிலையையும், அசையும் நிலைமை யையும் யாரும் செய்து காட்டலாம். இவ்விதமாக யாவரும் செய்து காட்ட முடியும்போது எந்த அம்மனும், மாரியாத்தாளும், மதுரை வீரனும் தீபச் சுடரில் புகுந்து கொண்டதாக எண்ணுவதில்லையே. ஆனால் பூசாரி அதே மாதிரி அசைய வைத்தால் அந்த அசைவு தெய்வங் களால் உண்டானதாக எண்ணுவது பைத்தியக்காரத்தனமல்லாது வேறென்ன..? காற்று அடிக்காமல்

இருக்கின்றன. ஆனால் காட்சி சாலைகளில் வசிக்கும் காட்டு மனிதக் குரங்குகளின் கைகளைப் பார்த்து சோதிடம் சொல்வார் யாருமில்லை..! நமது கைகளில் இருக்கும் கோடுகள் ( Grooves ) பூர்வ காலத்தில் நமது குரங்கு மூதாதைகள் மரத்தில் தாவிப்பிடித்து தாண்டுங்காலையிலுண்டான தோல் மடிப்புகள். அந்த வம்சத்திலிருந்து வந்தவர்களாகிய நமக்கும் அந்த மடிப்புகள் பரம்பரையாக (Hereditory) தோன்றுகின்றன.

நமது கைக்கோடுகள் காட்டுக் குரங்குகளின் வம்ச பரம்பரையாக வந்தவை. பல கோடி ஆண்டுகளாக நமது மூதாதைகள் மரங்களில் வாழுங்காலை தாவுவதற்கு வசதியாக தங்கள் கைகளை உபயோகித்து வந்திருக்க வேண்டும். இன்றைக்கும் வாலுடைய குரங்குகளும், வாலில்லாக் காட்டு மனிதக் குரங்குகளும் அம்மாதிரியாகவே தாவிச் செல்கின்றன. அப்படித் தாவிச் செல்வதால் கைகளும் மடிக்க வேண்டி வருகின்றன. கைகள் மடியுண்ட இடங்களில் வரிவரியாகக் கோடுகள் உண்டாயின. அப்படி உண்டான கோடுகள்தான் அந்த சந்ததி மூலமாக நமக்கும் வந்திருக்கின்றன. இதுதான் நமது உள்ளங் கைகளில் உண்டாகியிருக்கும் கோடுகளின் உற்பவம். மரத்தைத் தாண்ட மடிந்த இடங்களைக் கொண்டு நமது நடத்தைகளை எப்படி அறியக்கூடுமெனக் கேட்கிறோம்..? இரண்டு வரி ஐந்தாம் விரலுக்குக் கீழிருந்தால் அவனுக்கு இரண்டு பெண்சாதியாம்..! ஆனால் ஒரு வரியுடைய பலருக்கு பல பெண் சாதிகள் இருப்பதைக் காணலாம்..!

ஆதலின் இந்த வரிகளைக் கொண்டு நமது நடத்தைகளைக் குறிப்பது ஆங்கிலத்தில் ( Pure guess ) என்று சொல்லலாம். அதாவது வெறும் உத்தேசம்..! இந்த வெறும் உத்தேசத்தை உண்மையென நினைத்துக் கொண்டு மோசம் போகின்றவர் அனேகர் உளர். இந்த ஆதாரத்திற்கு இன்னொரு நியாயமும் உண்டு. விரல்கள் மடியும் இடங்களில் கோடுகளைப் பார்க்கலாம். இந்தக் கோடுகள் விரல் மடியுண்டபடியால் விரல் மடிப்புகளில் எல்லாம் விரல் வரிகள் தோன்றியுள்ளன. இப்பிரத்தியேகக் காட்சி போலவே மற்ற கை வரிகளும் தோன்றியுள்ளன. ஆனால் விரல் மடிப்புகளைக் கொண்டு நமது நடவடிக்கையைக் குறிக்கும் கைக்குறி சொல்வோர் இல்லை எனக் கருதுகின்றேன். அந்த விரல் மடிப்புகள் பிரயோஜனமில்லை எனில் மற்ற கைமடிப்புகள் மாத்திரம் பிரக்யாதி பெற்றது எவ்விதம்..? எவனோ ஒருவன் ஒரு காலத்தில் கைக் கோடுகளைப் பார்த்து குறி சொல்லியிருப்பான். அது முதலில் வெறும் உத்தேசமாகவே சொல்லியிருப்பான். இதை உண்மையென நம்பி பழக்க வாசனையால் கையைப் பார்த்து குறி சொல்லும் பழக்கம் உண்டாயிருத்தல் வேண்டும். எந்த மூடனும் இந்தப் பழக்கத்தைக் கையாளலாம். ஆனால் இந்த மூடநம்பிக்கையில் விசுவாசமுள்ளவர்களைப் பற்றித்தான் நாம் வருந்துகின்றோம்.

விளக்கு வைத்துப் பார்த்தல் எனும் மூடப் பழக்கம் பாமர மக்கள் வீடுகளில் வழங்கி வருகின்றது. ஒரு பூசாரி தன்முன் ஒரு விளக்கை ஏற்றி





இந்த நாட்டில் மட்டும்தான் வாழ்க்கைக்கே சம்பந்தமில்லாத இட்டுக் கட்டிய நிகழ்ச்சிகளின் சரடாக, பொய்மைகளின் மூட்டையாகச் சினிமா சீரழிந்து கொண்டிருக்கிறது. இன்றைய பெரும்பான்மை தமிழ்ச் சினிமாவைப் பார்க்க நேரும் ஐரோப்பியன், “ தமிழர்களுக்குக் காதலிப்பதைத் தவிர வேறு வேலையே கிடையாது ” என்று சொல்வது நிச்சயம். ஒரு இளைஞன் என்ன வேலை செய்கிறான், என்ன சம்பாதிக்கிறான், தன்னையும், தன்னைச் சார்ந்திருக்கிற குடும்பத்தையும் உயர்த்த என்ன பாடு படுகிறான் என்பதைச் சொல்ல இங்கே யாரும் முன் வரவில்லை. மாறாக, தன் காதலிக்கு அடுத்த வேளைச் சோற்றுக்கு உத்தரவாதம் தர முடியாத ஒரு இளைஞன், காதலிப்பதை மட்டும் படம் பிடித்துக் காசு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் நம் தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும்.

சினிமா ஒரு மக்கள் கலையாகத்தான் இருக்க வேண்டும். ஒரு கேமிராவும், படச் சுருள்களும், கொஞ்சம் தொழில் நுட்பமும், சில கலைஞர்களும் மட்டுமே சினிமாவின் தேவை. இன்று சினிமா கோடிகளில் புரளுமளவுக்குக் கெட்டுப் போயுள்ளது. ஒரு சினிமாவின் ஒட்டு மொத்தத் தயாரிப்புச் செலவு பாதிக்கும் மேலாக ஒரு கதாநாயகனுக்குச் சம்பளமாகக் கொடுக்கும் அவலம் நீடிக்கும்வரை நல்ல சினிமா என்பது நம் நாட்டில் சாத்தியமே இல்லை.

நமது சினிமா பொய்களாலானது. ஆணும், பெண்ணும் கற்பனையாகவே இங்குப் படைக்கப்படுகிறார்கள். வாழ்க்கையின், மண்ணின் நெடியோ, வாசமோ இல்லாத செயற்கை மனிதர்களை உற்பத்தி செய்து, செயற்கை வெளிச்சத்தில் படம்பிடித்து, செயற்கையான சங்கீதத்தோடும், செயற்கையான ஆடல், பாடல்களோடும், செயற்கையான கருத்தை, செயற்கையான நடிப்போடும், செயற்கையான விளம்பரங்களோடும் தருகிற செயற்கையான கலையாகவே பெரும்பாலான தமிழ்ச் சினிமாக்கள் இருக்கின்றன.

வித்தியாசமான படம் என்கிறார்கள். எதில் வித்தியாசம்..? அதே பையன், அதே பெண்ணை, அதே கலாட்டா செய்து, அதே காதல் பாட்டுப்பாடி அதே மோஸ்தரில் காதலிக்கிறான். கதாநாயகியின் அப்பா அதே உறுமலை உருமுகிறார். துப்பாக்கியால் துளைக்கப்பட்டவன் பேசவேண்டிய வசனத்தையெல்லாம் பேசிவிட்டே சாகிறான். கடைசியில் எல்லாம் சுபமாகவே முடிகிறது. இதில் எங்கே வித்தியாசம்..?

சினிமா பேசத் தொடங்கிய காலத்திலிருந்தே தமிழ் சினிமாவும் தமிழ் பேசுகிறது. உலகத்தின் சிறந்த பத்து இயக்குனர்களில் தமிழ் இயக்குனர் இல்லை. சிகரம், இமயம் என்றெல்லாம் நம் இயக்குனர்களை நாம்தான் கொண்டாடுகிறோம்.

தமிழ் சினிமாவை உலகம் கொண்டாட வேண்டாமா..? ஏன் கொண்டாட வில்லை..? நம் சினிமா ஈரானியச் சினிமாவைப் போல மக்கள் வாழ்க்கையைப் படம் பிடிக்கவில்லை என்பதே உண்மை.

" ஏக் தின் பிரதின் " என்று ஒரு இந்திப்படம். அலுவலகம் முடிந்து ஆறு மணிக்கு வரவேண்டிய பெண் 7 ஆகியும், 8 ஆகியும் வரவில்லை. இது ஒரு கீழ், மத்தியதரக் குடும்பத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே அந்தச் சினிமாவின் கதை. விபத்தா..? அந்தப் பெண் யாருடனாவது ஓடிப் போய்விட்டாளா என்றெல்லாம் குழப்பம். குடும்ப உறுப்பினர்கள் தவியாகத் தவிக்கிறார்கள். 10.30 மணிக்கு கடைசி பஸ்ஸில் அந்தப் பெண் வந்திறங்குகிறாள். வீட்டுக்குள் வருகிறாள். முகம் கழுவித் திரும்புகிறாள். உணவு மேசையில் உட்கார்ந்து சாப்பிடுகிறாள். பிறகு படுக்கைக்குப் போகிறாள். இந்தப் படத்தின் இயக்குனர் மிருணாள் சென். ஒரு நிருபர் ( தமிழ் நிருபர்தான் ) அவரிடம் அந்தப் பெண் எங்கு போனாள் என்று கேட்டார். இயக்குனர் எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் எனக்கில்லை என்றார். 6 மணிக்குத் திரும்ப வேண்டிய ஒரு பெண் 8, 9 மணியாகியும் வீட்டுக்குத் திரும்பவில்லையென்றால் ஒரு கீழ், மத்தியதரக் குடும்பத்தில் என்ன விளைவுகள் நேரும் என்பதைச் சித்தரிப்பது மட்டும்தான் என் வேலை என்றார் அந்த இயக்குனர்.

இந்திய, உலகச் சினிமாக்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள ஏராளமாக இருக்கின்றன. உலகுக்கு நாம் கற்றுத்தர ஏதேனும் இருக்கிறதா என்று நாம் யோசிக்க வேண்டும்.

திலகவதி அவர்களின் " காலம் தோறும் அறம் " என்னும் நூலிலிருந்து.

நன்றி : அம்ருதா பதிப்பகம், எண் – 5, 5 வது தெரு, எஸ். எஸ். அவென்யூ, சக்தி நகர், போரூர், சென்னை – 600 116.

குறிப்பு : இளம் வயது ஆணையும், பெண்ணையும் ஆடவிட்டு, பாடவிட்டு, ஓட விட்டு திருமணத்தில் முடியும் தமிழ் சினிமாக்கள், திருமணத்தில் தொடங்கி குடும்ப வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எப்படி வெற்றி கொள்வது என்பதையும், திருமணத்திற்கு முன்பு பருவ வயதில் உருவாகும் காதல் கனவுக்கும், குடும்ப வாழ்வுக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் உள்ளது என்பதையும் சொல்லுகின்ற " தமிழ் சினிமாக்களாக " மாற வேண்டும் என்பது நமது விருப்பமாகும். ✸





ஓலைச் சுவடியோ அல்லது காகிதச் சுவடியையோ திருப்புகிறான். உடனே உனது காரியம் கைகூடுமென்கிறான். உனது மகன் திரும்பி வருவான் என்கிறான். உனது புருஷனுக்கு வேலை கிடைக்குமென்கிறான். இத்தியாதி அற்ப விசயங்களை தான் தெரிந்து சொல்லுவது போல நடித்து இந்தக் குறி சொன்னதற்கு கால் அணா மூன்று பை பெறுகின்றான். இந்த ஏழை சொல்லும் குறிக்கும் "இந்து " முதலிய பேப்பர்களில் விளம்பரப்படுத்தும் பிரசண்ட சோதிடருக்கும் ஒன்றும் வித்தியாசமில்லை என அறிக, ஒரே வித்தியாசமுண்டு. அதாவது ஒருவன் காலணாவுக்குக் குறியோ, சோதிடமோ, ஆருடமோ சொல்லுகிறான். மற்றொருவன் ஒரு ரூபாய் முதல் 5, 10, 15 வரை பெறுகின்றான். இரண்டு நபரும் சொல்லும் சோதிடங்கிளில் ஒன்றும் மெய்யில்லை. எல்லாம் மன மயக்கே. பொய்யை நம்புவதற்கு வெறும் நம்பிக்கை ( Simple Belief ) தான் வேண்டும். லண்டன் பட்டணத்தில் சில பெரிய தெருக்களில் கொட்டை கொட்டையான எழுத்துக்களால் " இங்கு கை பார்த்துக் குறி சொல்லப்படும், இங்கு எல்லாக் குறைகளும் நிவர்த்திக்கப்படுமென்று " விளம்பரமிடும் விளம்பரப் பலகைகளைப் பார்க்கலாம். அங்கும், இங்கும், எங்கும் பாமர ஜனங்கள் தங்கள் சஞ்சலங்களை கிரமமான வழிகளில் போக்கிக் கொள்ளாமல் மூட சோதிடனிடம் குறி கேட்டு மயங்குகின்றார்கள். அறிவை இழந்தவர்கள்தான் இத்தியாதி பித்தலாட்டங்களுக்கு இடம் கொடுப்பார்களேயொழிய அறிவுடையார் இந்த மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடார்கள். உலகில் கோடான கோடி மக்கள் காலை முதல் இரவு வரை உழைத்து தங்கள் ஜீவனத்தை செய்து உயிர் பிழைத்து வருகின்றார்கள். ஆனால் சிலர் வேலை ஒன்றும் செய்யாமல் சோம்பல் கொண்டு அறிவையும் வளரச் செய்யாமல், பகுத்தறிவையும் கொன்று, சிற்சில மோச வார்த்தைகளைக் கேட்டு ஒருவித ஆறுதலை அடைகின்றார்கள். சோதிடம், ஆருடம், குறி முதலிய வித்தைகள் ஒரு வகுப்பார் பிழைக்க ஏற்படுத்திக் கொண்ட உபாயங்கள் என அறிக. விஞ்ஞான முறையால் இனி வரும் சம்பவங்களை அறிவது போல் இந்தக் குறிகளாலும், சோதிடத்தாலும், கைக்குறிகளாலும் ஒன்றும் தெரிந்து கொள்ள வகை இல்லை. எங்கும் தெரிந்து கொண்டவருமில்லை. சோம்பேறிகள் மனத் திருப்திக்காக ( Mental Satisfaction ) உண்டாக்கிக் கொண்டது இந்த வித்தைகளேயொழிய பொது மக்களுக்கு பொதுப் பிரயோசனத்துக்கு ஏற்பட்ட வித்தைகள் அல்லவென அறிதல் வேண்டும்.

கையிலுள்ள ரேகைகளைப் பார்த்து சோசியம் சொல்லுவது உலக முழுமையும் பரவியுள்ள ஒரு வித்தையாகும். அது வெறும் பழக்கமே அல்லாது உண்மையல்ல. நமது கையிலுள்ள கோடுகளைப் போல் நமது ஒரு காலத்து பூர்வப் பங்காளியாகிய வாலில்லாக் குரங்குகளுக்கும் உண்டு. இன்னும் தூரப் பங்காளியாகிய ( Distant Cousins ) வாலுடைய குரங்குகளுக்கும், கையில் கோடுகள்

மதுரை வீரன் படத்தாலும் உடுக்கை சிலம்பாலும், தீபத்தின் சுடர் அசைவாலும் மலட்டுத்தனம் நீங்குமாயின் இவ்வளவு சுளுவாக கோடான கோடி கறம்பு நிலங்களை விளைய வைக்கலாமே..! சில சமயங்களில் குறி கேட்கப்போனவர்களுடைய கோரிக்கைகளை அவர்கள் அவனிடம் சொல்லாமலே குறி சொல்லுகிறவன் தெரிந்து கொண்டவன் போல் தெரிவிக்கிறான். இதை மாயாவாதத்தில் ( Spiritualism) எண்ணத்தைத் தெரியப்படுத்தாமலே தெரிந்து சொல்தென்று ( Thought Reading ) கூறுவார். இதனை மறைவான ஞானமெனவும் (Occultism ) கூறுவர். இந்தத் தந்திரத்தைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஒரு சிறு புத்தகமாகிய ( Evidence for the Supernatural by Ivor Tuckett priced 1 shilling ) இதனை வாங்கிப் படிக்கலாம்.

குறி வித்தையில் சில மோசங்கள் நடக்கின்றன. சில இடங்களில் ரகசிய ஆட்களைக் கொண்டு விசாரித்துத் தெரிந்து கொண்ட பிறகு குறி சொல்கிறார்கள். சாதாரணமாக குடுகுடுப்பைக்காரர்கள் இந்த மோசத்தைச் செய்கிறார்கள். சிலர் தங்களுடைய உதடு அசைவதாலும், கைவிரல்கள் ஆடுவதாலும், மெதுவாகத் தங்களுக்குள்ளே பேசிக் கொள்வதாலும், தங்கள் முகப்பார்வையாலும் தங்கள் குறைகளைத் தெரியும்படி செய்கின்றார்கள். கூர்மையான பார்வை உடையோனாகிய குறிசொல்வோன் இந்த சைகைகளைக் கொண்டே அவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்து கொள்கிறான். குறி சொல்கிறவன் கேட்கும் கேள்விகளுக்குக் கொடுக்கும் விடைகளாலேயும் தங்களுக்குத் தெரியாமலேயே தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டு விடுகின்றார்கள்.! இத்தியாதி தந்திரங்களால் குறி சொல்லுகின்றவன் தன்னை பிறர் நம்பும்படி செய்கின்றான். இந்த சூழ்ச்சிகளை அறியாத பாமர மக்கள் குறிகாரன் சொல்வதெல்லாம் மதுரை வீரன் அருளாலென்றும், தெய்வீகத் தன்மையினாலென்றும் மதி மயங்கி மூட நம்பிக்கையை வளர்த்து வருகின்றார்கள். இந்தக் குறி மேடைகளில் எத்தனை பேர் தங்கள் பொருளை இழந்தவர்கள்..! மதியை இழந்தவர்கள். இவற்றிற்குக் கணக்கில்லை..! ஆனால் நமக்கும் நம் நாட்டிற்கும் நன்மை பயக்கும் நமது சுய மரியாதையோர் அதிர்ஷ்ட வசமாகத் தோன்றி இத்தியாதி மோசங்களை வெளிப்படுத்தி வரும் நமது நாட்டின் பாக்கியமே பாக்கியம்.

( Palmistry ) அதாவது கை பார்த்து குறி சொல்லும் வித்தை ஒன்றுள்ளது. கை ரேகைகளைப் பார்த்து குறவர்கள் ( Nomads ) சாதாரணமாகக் கிராமங்களில் குறி சொல்வதுண்டு. குடுகுடுப்பைக் காரனும் இவ்வித குறிகளைச் சொல்லுகின்றான். பண்டார வேஷம் போட்டுக்கொண்டு, ஓலைச் சுவடி ஒன்றை கையிலேந்தி, கையைப் பார்த்து குறி சொல்லும் வேஷக்காரர்கள் சென்னை தெருக்களிலும் நாட்டுப் புறங்களிலும் பார்க்கலாம். நமது சென்னை மூர் மார்க்கெட்டு (Moore market ) க்கு அருகாமையில் அநேகர் ஆருடம் அதாவது ஒருவிதக் குறி சொல்லிப் பிழைக்கின்றார்கள். கையைப் பார்க்கின்றான்.







# நட்சத்திரங்கள்..சூரியன்..பூமி

வ. கந்தசாமி, எம்.ஏ.பி.எச்.டி.
திருமதி. க. வசந்தா எம்.எஸ்.சி., எம்.பில்.,

**இ**ரவு வானில் நாம் பல ஆயிரம் விண்மீன்களைக் காண்கிறோம். தொலை நோக்குக் கருவியை பயன்படுத்தாமல், நமது கண்களால் ஏறக்குறைய 5700 விண்மீன்களைக் காணலாம். எனினும் அண்டம் அல்லது பிரபஞ்சம் எனப்படும் விண்வெளியில் மொத்தம் 20 லட்சம் கோடி கோடி (20000000000000000000) விண்மீன்கள் அமைந்துள்ளன என்று வானறிவியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

விண்வெளியில் காணப்படும் விண்மீன்கள் அனைத்தும் பல பெருங் கூட்டங்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு விண்மீன் கூட்டத்திலும் பல கோடி விண்மீன்கள் இடம் பெற்று உள்ளன. இவ்வகையான விண்மீன் கூட்டங்களில் ஒன்றுதான் பால்வழி விண்மீன் கூட்டம். பால்வழி விண்மீன் கூட்டத்தில் 10,000 கோடி விண்மீன்கள் இடம் பெற்றுள்ளதாக அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் காலையில் கிழக்கில் உதயமாகி பின் மாலையில் மேற்கில் மறையும் நமது சூரியன் ஒரு விண்மீனே. சூரியன் பூமிக்கு மிக அருகிலுள்ள விண்மீன் ஆகும். நாம் இரவில் காணும் அனைத்து விண்மீன்களும் சூரியன்களே. எனினும் நமக்கு வெகு அண்மையிலுள்ள விண்மீன் மட்டுமே **சூரியன்** என்ற நிலையான பெயரைப் பெற்று விட்டது. நமது சூரியன் பால்வழி விண்மீன் கூட்டத்தில் ஒரு விண்மீனாக இடம் பெற்றுள்ளது.

நமது சூரியனின் குறுக்களவு 1.4 மில்லியன் (14,00,000) கி.மீ. ஆகும். இது பூமியின் குறுக்களவை விட 109 மடங்கு பெரியதாகும். சூரியனை விட உருவில் மிகப்பெரிய விண்மீன்களும் உள்ளன. அவற்றில் சில கேபெல்லா, ஆர்க்டரஸ், பிட்டெல்கீஸ், ரீகல், தினிப் என்பவை ஆகும். சூரியனைவிட உருவில் மிகச் சிறிய விண்மீன்களும் உள்ளன. நியூட்ரான் விண்மீன்களின் குறுக்களவு வெறும் 20 கி.மீ. மட்டுமே.

நமது சூரியன் நாம் வாழும் பூமியிலிருந்து சராசரியாக 149.6 மில்லியன் அதாவது 14.96 கோடி கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஆனால் மற்ற விண்மீன்கள் மிக மிக நெடுந்தொலைவில் அமைந்துள்ளன. எனவே விண்மீன்களின் தொலைவைக் குறிப்பிட **ஒளியாண்டு** என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஒளி ஒரு விநாடிக்கு 3,00,000 கி.மீ. வேகத்தில் செல்கிறது. இம்முறையில் ஒளி ஒரு ஆண்டில் கடந்து செல்லக் கூடிய ( 9460800000000 கி.மீ ) தூரம் ஓர் ஒளியாண்டு எனக் குறிப்பிடப்படுகிறது.

நமது சூரியனுக்கு அடுத்து பூமிக்கு அருகிலுள்ள பிராக்சிமா சென்டாரி என்ற விண்மீன் 4.2 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. பால் வழி விண்மீன் கூட்டத்தில் ஒரு விண்மீனாக இடம்பெற்றுள்ள சூரியனை நாம் வாழும் பூமி ஒரு கோளாகச் சுற்றி வருகிறது. நமது பூமியுடன் சேர்த்து மொத்தம் ஒன்பது கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. கோள்கள் தனி ஒளி பெற்றவை அல்ல. சூரியனின் ஒளியை அவை பிரதிபலிக்க மட்டுமே செய்கின்றன.

நமது சூரியனைப் போல, பல விண்மீன்களை அதனதன் கோள்கள் சுற்றி வருகின்றன. ஒரு விண்மீனின் ஈர்ப்புத் திறனுக்கு உட்பட்டு அதன் கோள்கள் இயங்குகின்றன. சூரியனின் ஈர்ப்புத் திறனுக்கு உட்பட்டு அதைச் சுற்றி வரும் ஒன்பது கோள்களில் பூமியும் ஒன்றாகும்.

நமது பூமி சூரியனை ஒரு நீள் வட்டப் வழியில் சுற்றி வருகிறது. இந்த நீள்வட்ட வழியின் சுற்றளவு 94.0 மில்லியன் (940000000) கி.மீ. ஆகும். நமது பூமி சூரியனை மணிக்கு 1,07,200 கி.மீ. வேகத்தில் சுற்றி வருகிறது. ( விநாடிக்கு 29.8. கி.மீ. ) . இவ்வேகத்தில் பூமி, சூரியனை ஒருமுறை சுற்றிவர ஆகும் காலமே ஒரு ஆண்டு எனப்படுகிறது. இந்த ஓராண்டு காலம் 365 நாட்கள் 5 மணி 48 நிமிடம் 46 விநாடி என மிகவும் சரியாக குறிப்பிடப்படுகிறது. பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்ற அறிவியல் உண்மையை உலகிற்கு முதன் முதலில் கூறியவர் கோப்பர் நிகஸ் ( 1473 - 1543 ) என்ற வானியல் அறிஞராவார். இவரே தற்கால வானவியலின் தந்தை எனக் குறிப்பிடப்படுகிறார்.

நாம் வாழும் பூமியின் சுற்றளவு 40,091 கி.மீ ஆகும். கிழ மேலாக 12,756 கி.மீ. குறுக்களவும், வடக்கு தெற்காக 12, 714 கி.மீ. குறுக்களவும் கொண்டது பூமி. பூமி ஓர் உருண்டை வடிவத்தைப் பெற்றுள்ளதால் சூரியனின் ஒளிபடும் பகுதியில் பகலும், ஒளிபடாத பகுதியில் இரவும் ஏற்படுகிறது. பூமி மேற்கிலிருந்து கிழக்காக தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருப்பதால், சூரியனும் மற்ற விண்மீன்களும் கிழக்கில் உதயமாகி மேற்கில் மறைவது போலத் தோன்றுகிறது.

பூமி தன்னைத்தானே 1600 கி.மீ. வேகத்தில் சுற்றிக் கொள்கிறது. 40,091 கி.மீ. சுற்றளவுள்ள நமது பூமி தன்னைத் தானே 23 மணி 56 நிமிடங்களில் ஒருமுறை சுற்றிக் கொள்கிறது. இந்த நேரத்தையே நாம் ஒரு நாள் என்கிறோம்.


பூமி தன்னைத்தானே தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருப் பதால், நமக்கு பகல், இரவு என்ற இயற்கை நிகழ்வு மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. ■





கூடியதாக இருக்கின்றன. குறி சொல்லும் இடங்களில் மதுரை வீரன் படமும், அதில் குதிரை சவாரி நாய்களுடன் செய்வதாக வரையப் பட்டு தொங்கவிட்டிருக்கும். குறி சொல்பவனும் பகல் வேசத்துக்குரிய திருநீர், குங்குமம் திரேக முழுமையும் பூசிக் கொண்டு கழுத்தில் பொன் உத்திராட்சம், கைகளில் பொன் தோடா, பட்டாடை முதலிய வஸ்திரங் களை அணிந்து, உடுக்கை சிலம்புடன் அவன் இஷ்ட தேவதையை வசிய மாக்க முயற்சி செய்வான். இந்த வேஷங்களைக் கண்டோர் மயங்கி விடுகின்றார்கள். இவர்கள் வந்தவர் களின் மயக்கத்தை அதிகரிக்க, உடுக்கையையும் சிலம்பையும் உரத்துத் தட்ட ஆரம்பிப்பான். அவனுக்கு ஆவேசம் வருவதாக நடிப்பான். இந்த ஆவேசத்திற்கு வேண்டிய மதுபானமும் அருந்துவ தோடு புட்டியிலும் சாராயம் மதுரை வீரனுக்காக படையல் போட்டிருக்கும். வேலை ஒன்றுமில்லாத வீணர்கள் அந்தக் குறி மேடைகளில் சென்று பக்திவான்களைப் போல் நடிப்பார்கள். இந்தச் சூதை அறியாத பெண்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பார் கள். இவற்றை ஏதோ அலட்சியமாகக் கேட்டு அதற்கு ஏதோ ஒரு பரிகாரத் தைத் தெரிவிப்பான். இந்தப் பித்தலாட்டங்களுக்கு ஏமாந்து கையிலிருக்கும் பணத்தையோ, நகையையோ தட்சணையாகக் கொடுப்பார்கள். இந்த விதமாக அந்தப் பெண்கள் மதிமோசம் போவார்கள்.

முக்கியமாக பெண்கள் பிள்ளை வரம் பெற குறி மேடைகளுக் குப் போவதைப் பார்க்கலாம் அல்லது தனக்கும் தனது கணவனுக்குமுள்ள மனஸ்தாபத்தைக் குறித்து குறி கேட்கப் போவதுமுண்டு. இந்த இரண்டு விசயங்களைக் குறி சொல்லுகிறவன் எப்படித் தீர்ப்பானோ என்று விசாரிப்பதே கிடையாது. இதைப் போன்ற மூடநம்பிக்கையைக் காண்பதரிது. பிள்ளை பிறப்பதற்கு ஆண், பெண் இருவர் திரேகம் தக்க பருவத்தில் இருத்தல் வேண்டும். ஆயிரக்கணக்கான ஆண் பெண் களுடைய திரேகம் பக்குவப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு சந்ததி விருத்திக்குத் தடையொன்றுமில்லை. ஆனால் ஏக தேசமாக ஒருவர் இருவருக்கு திரேக பக்குவமில்லாமல் இருக்கும். அதனால் கர்ப்பம் தரிக்க முடியாமற் போகும். இதனையும் தீர்த்துக்கொள்ள மருந்துகளும், சிகிச்சைகளும் இருக்கின்றன. மலட்டு ஆணும், பெண்ணும் சிற்சில சிகிச்சையால் சந்ததி விருத்தி பெறுகிறார்கள். அப்படியும் சிலருக்கு குணப்படுவதில்லை. மலட்டு ஆண் பெண்களைப் போல ( **Sterile man and woman** ) மலட்டு ஆடும், மாடும் புழுப் பூச்சிகளும், செடிகளும், மரங்களும் உலகில் ஏகதேசமாக இருக்கின்றன. விளையாத நிலங்களும் சில இருக்கின்றன. இவற்றை ஏதாவது செடி, மரம், புழு, பூச்சி, ஆடு, மாடுகளை மறு உற்பத்தி செய்ய ( **Re produce** ) மதுரை வீரனால் முடியாதிருக்க, ஆண் – பெண்களை மட்டும் பிரஜா உற்பத்தி செய்வதென்றால் யார் நம்புவது..? இதை உன்மத்தர்கள் தான் நம்பக்கூடும்..? பிரஜா விருத்திக்குத் தடையை நீக்க டாக்டர் களுக்குத் தெரியுமே அல்லாது மோசக்காரர்களாகிய ( **Mountebanks and Charlatans** ) குறி சொல்லுகின்ற வர்களுக்கு ஒன்றும் தெரியா.




# விஞ்ஞான நடைமுறையும் மூடநம்பிக்கையும்

விஞ்ஞான நடைமுறையும் மூடநம்பிக்கையும்

– தோழர். எம். சிங்காரவேலு –


**மூ**டநம்பிக்கைகளில் சிலவற்றை விஞ்ஞான முறைப்படி விசாரித்து வந்ததில் அவை இரண்டு காரணங்களால் உண்டாயிருக்க வேண்டுமென அறிந்தோம். அவை யாவன, வெறும் பழக்க வார்த்தை களைக் கொண்டே பல மூட நம்பிக் கைகள் நிலைத்து வருகின்றன. இரண்டாவது ஏக தேச சந்தர்ப்பங்க ளிலிருந்து மூட நம்பிக்கைகள் பிறந் திருக்க வேண்டுமெனவும் தெரிந்து கொண்டோம். சில மூட நம்பிக்கை களுக்கு நமது ஆசையே (Our wish) காரணமாய் இருக்கலாமெனவும் தெரிந்தது. இந்தக் காரணமொன்றே பல பொய் நம்பிக்கைகளின் மேல் வைத்துள்ள விசுவாசத்திற்கு ஆதார மெனஅறிதல் வேண்டும். நமது ஆசையின்படியே விசயங்கள் நமக்கு அனுகூலமாகவே வேண்டுமென்ற மனப்பான்மை பெரும்பாலருக்கு உண்டு. இந்த மனப்பான்மை யாலேயே சோசியத்தின் மேலும், ஜாதகத்திலேயும், குறிசொல்லும் விசயங்களிலேயும், கை பார்ப்பதிலே யும், மை போட்டுப் பார்ப்பதிலேயும் நம்மவர்களில் பலருக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. கஷ்டப்படாமலேயே நமக்கு செல்வம் வராதா..? நாம் முயற்சி செய்யாமலேயே நம்மை விட்டுப் பிரிந்தவர்கள் திரும்பி வர மாட்டார்களா..? உழைப்பின்றி சம்பத்தும், செல்வமும், கீர்த்தியும் வராதா..? என்ற நோக்கங்கள் நமது மனத்தில் அடுத்தடுத்து எழுவதால் ஆருடம் என்ன தெரிவிக்கின்றது. குறி சொல்லுகிறவன் நமக்கு என்ன ஆதாரமளிக்கிறான்..? கை ரேகை என்ன குறிக்கின்றது..? என்று அவா கொண்டு இந்த மோக வார்த்தை களின் மேல் நம்பிக்கை வைக்கின் றோம்.

குறி சொல்லும் விசயங்களில் நமது பாமர ஜனங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நமக்குப் பல குறைகள் நேரிடுகின்றன. இந்தக் குறைகளை நீக்கிக் கொள்ள ஆசை மேன் மேலும் உண்டாவது சகஜம். இந்த ஆசையால் குறி சொல்லுகிற வன் சொல்லை நம்ப நேரிடுகின்றது. அவன் சொல்லுவது மெய்யோ பொய்யோ நம்முடைய கோரிக்கைப் படி நிறைவேறும் என்று அவன் சொல்லுகின்றபடியால் அவன் சொல்லின் மேல் நம்பிக்கை ஏற்படு கிறது. குறி சொல்வார் யார் என்று பார்ப்போம்.

குறி மேடையில் குறி சொல்லுகிறவர்களில் பலர் நரம்பு வியாதியால் (Nervous Disorder) பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எளிதில் கோபம், சந்தோசம் அடை வார்கள் (Easily Excited). இவர்க ளுடைய ஆடம்பரங்கள் பாமர ஜனங் களின் மனதை உருகச் செய்துவிடு கின்றன. உடுக்கை, சிலம்பு முதலிய வாத்தியங்கள் குறிகேட்க வந்திருப் போரை ஒருவித மயக்கமுண்டாக்கக்








# பயணம் குறித்த பார்வைகள்

**ப**யணம் ஆசிரியர் அவர்களுக்கு..! நான் செந்தமிழ்க் கிழார் அவர்களைச் சந்திக்க சென்னை சென்றிருந்தபோது, அவர் பயணம் இதழைத் தந்தார். இதழ் நல்ல கருத்துக்களுடன் நன்றாக உள்ளது. எனவே சந்தா அனுப்பியுள்ளேன். தொடர்ந்து புத்தகம் அனுப்பவும்.

S. கிருஷ்ணராமானுஜம் – ஆண்டிபட்டி.

ஆசிரியர் அவர்களுக்கு..! “ ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் ஏற்றால் எடுத்துரைப்பேன், எவர் வரினும் நில்லேன், அஞ்சேன் ” என்ற கண்ணதாசன் வரிகளுக்கேற்ப “ கருப்புப் பணம்... சிவப்புப் பார்வை ” என்ற தங்களின் கட்டுரை தலையானதாகவும், தலைமுறை தழைத்தோங்க தரமானதாகவும் அமைந்துள்ளது.

பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் பாதிக்கபட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் பட்டியலில் நெசவாளர்களும் அடங்குவர். தறிகாரர்கள் உற்பத்தி செய்து கூட்டுறவு சங்கத்தில் ஒப்படைக்கப்பட்ட சேலை மற்றும் பிற இரகங்களுக்கான கூலியை ஒரு நாள் வேலை இழந்து வங்கியில் வரிசை யில் காத்துக் கிடந்து எடுக்க வேண்டிய சூழல் உள்ளது. “உதவாக்கரைகள் நாட்டில் பதவி பெற்றால் பரிதவிப்போர் மக்களன்றோ ” என்ற பாவேந் தரின் வரிகள் நினைவுக்கு வருகிறது.

ஆல. தமிழ்ப்பித்தன் – புனல்வேலி.

பயணம் இதழ் கிடைத்தது. விவேகத்தையும், நெஞ்சுரத்தையும் மக்கள் மனத்தில் விதைத்தும், பதியமிட்டும் சென்றுள்ள சிங்காரவேலரின் சமூகத் தொண்டு காலத்தால் அழியாதது. மார்க்சீயக் கொள்கைகளில் உழைப்பும், சிந்தனையுமே மனிதனை முழு மனிதனாக்குகிறது என்ற உண்மை பளிச்சிட்டாலும், இந்திய மக்களின் இதயத்தில் இடம் பிடிக்கவில்லையே. அந்தக் கனவு நனவாகாமல் கலையாது என்ற திருநாவுக்கரசரின் வாக்கு பலிக்கட்டும்.

புலவர் ந. ஞானசேகரன் – திருலோக்கி.

பயணம் இதழ் கிடைத்தது. வீட்டுச் சிறையிலிருந்த தோழர். சிங்கார வேலு தனது இல்லப் பெண்களின் கருப்புப் புடவையை, மொட்டை மாடியில் கருப்புக் கொடியாக பறக்கவிட்டு இளவரசர் வேல்ஸை தலைகுனிய வைத்த தகவலைப் படித்து வியந்தேன். அடக்கு முறைக்கு அஞ்சாது, துணிச்சலோடு நின்ற தோழர். சிங்காரவேலுவின் வீர வரலாற்றையும், முழுமையான செயல் திறனும், சமயோசிதமான அறிவாற்றலும் உள்ளவர்கள் எப்போதும் வாய்ப்புகளுக்காக இதயத்தையும், விழிகளையும் திறந்தே வைத்திருப்பதால் இடர்களை உடைத்தெறிந்து தங்கள் நிகழ்வுகளை வரலாறாய் மாற்றியதையும் இன்றைய இளைய சமுதாயம் அவசியம் அறிய வேண்டும்.

நவீன்குமார் – நடுவிக்கோட்டை.



# சனநாயகம்..

( கட்டுரை )

– செம்மலர் மா. நடராசன் –
9751437264



அன்பார்ந்த வாசகர்களே..! தோழர்களே..! பயணம் இதழில் ஏற்கனவே நான் வரைவு செய்து அனுப்பிய "சனநாயகம்" என்ற கட்டுரைத் தொடர் தடம் 109, 110, 111 ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. இனித் தொடராக எழுத வேண்டாம், ஒரு பொருளின் பல்வேறு தாக்கங்களை, நிகழ்வு களை, இயன்றவரை பகுதிகளாக விவரிப்பது என்கிற நோக்கத்தில் மீண்டும் என் எழுத்துக்களை வரைவு செய்து பயணத்திடம் ஒப்படைப்பது என்று முடிவு செய்து எனது பணியைத் தொடருகிறேன். என்னிலும் அதிகமாக கூர்மையாக, அனுபவங்களை, காட்சிகளை, நிகழ்வுகளை , வரலாறுகளை அறிந்து உணர்ந்தவர்கள் பலர் இருப்பீர்கள் என்கின்ற உண்மையை நான் உணர்ந்துள்ளேன். எனது எழுத்துப் போக்கில் குறைகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். மாந்தகுலத்துக்கு அவசியமானவைகளை வடித்துள்ளேன் என்றால் பாராட்டுங்கள். எல்லாவற்றையும் விட விமர்சனங்களையே மற்றவர்களிடமிருந்து ஆவலோடு எதிர்பார்ப்பவன் நான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்
உங்களில் ஒருவன், உங்கள் சகோதரன்
தோழன் செம்மலர் நடராசன்.


**ச**னநாயகம், சர்வாதிகாரம், தீவிரவாதம், பயங்கரவாதம் இப்படியான கூறுகள் மனிதகுலத்திற்கு மட்டுமே உரித்தானவைகள். பயங்கரச் செயல்பாடு களையும், தீவிரவாதத்தையும் ஒரே நேர்கோட்டில் நிறுத்த முனைவது மனிதர்களுள் பாசிசத் தன்மை கொண்டவர்களின் செயலாகும். வெறும் தீவிரவாதத்தால், நடைமுறைகளால் சனநாயகத்தை நிலைநாட்டிவிடலாம் என்று கருதுவது சிறுபிள்ளைத்தனமாகும். இதற்கு மாறாக இது சனநாயக நாடப்பா, இதற்குள் இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று தொண்டர்களை, சகாக்களை, அவர்களின் உணர்வுகளை, சிந்தனை ஆற்றலை மழுங்கடிப்பது திரிபுவாதம், திருத்தல்வாதமாகும். இது தெளிவான சமூக விஞ்ஞானக் கோட்பாடுகளைக் கொண்ட தத்துவஞானச் செருக்கில், கண்களுக்குப் புலப்படாமல் உணர்ந்து கொள்ள இயலாத வகையில் நம்மிடையே ஒளிந்து கொண்டிருக்கும் வைரஸ் கிருமிகளாகும்.

பலருடைய உழைப்பைச் சுரண்டி சிலர் செழித்து வளர்ந்து உழைக்கும் மக்களை அடிமை கொள்வதைவிட, சுரண்டலுக்கு ஆதரவாக கட்டமைக்கப் பட்டுள்ள அரசு இயந்திரக் கட்டமைப்புகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளைவிட, மேடைகளில் தெருக்களில் புரட்சிகர ஜனநாயக வேடமிட்டு, இருள்விலக்க ஏற்றிய ஒளி விளக்கை அணைத்துவிட்டு இருளில் உறவாடும் தவறான போக்குகளே திரிபுவாதம், திருத்தல்வாதமாகும்.





## நூல்கள் அறிமுகம்



### குற்றங்களே நடைமுறைகளாய்...

(சமூகக் கட்டுரைகள்)

ஆசிரியர் : ப. திருமலை

பக்கங்கள் : 224. விலை ரூ. 150



### பத்திரிகைகளின் பார்வையில் நான்..

(வாழ்க்கை வரலாறு)

ஆசிரியர் : கவிஞர். ஏகலைவன்

பக்கங்கள் :144. விலை ரூ.50




### மனசெல்லாம்...

( ஹைக்கூ கவிதைகள்)

ஆசிரியர் : கா.ந. கல்யாணசுந்தரம்

பக்கங்கள் : 96. விலை ரூ. 80



### குத்து விளக்கும்... குங்குமச் சிமிழும்..

( கவிதைகள்)

ஆசிரியர் : முத்துக்குட்டி

பக்கங்கள் : 96. விலை ரூ. 65



### தமிழ் ஏந்தி உலகாள்வோம்..

( கவிதைகள்)

ஆசிரியர் : சித்தார்த் பாண்டியன்

பக்கங்கள் : 96. விலை ரூ. 75

**ஐந்து நூல்களும் வெளியீடு :**
**வாசகன் பதிப்பகம், 167, AVR காம்ப்ளக்ஸ்**
**அரசு கலைக் கல்லூரி எதிரில், சேலம் – 7**

ஆனாலும் தோழர். V.R. அவர்களை வெளியில் நடமாட விடுவதில் உடன்பாடற்ற பிரிட்டிஷ் அரசு, 1940 – ம் ஆண்டு வேலூர் சிறையிலும், 1942 – ம் ஆண்டு இராஜமுந்திரி சிறையிலும் என மாற்றி மாற்றி சிறையில் காவல் கைதியாகவே வைத்திருந்தது.

மறைந்த தோழர். வழக் குரைஞர் V.G . ராவ், இவருக்காக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஏறத்தாழ பத்தாண்டுகள் காவல் கைதியாக வைத்திருந்தது சட்டரீதியான தவறென்று வாதாடி V.R. க்கு விடுதலை பெற்றுத் தந்தார்.

அந்திம நாட்களில் கண் பார்வையிழந்து, உறவினர் ஒருவர் வீட்டில் தஞ்சமடைந்து காலமானார் அந்த மாசற்ற தியாகி தோழர் V.R.

இளமையின் ஆரம்பம் சிறப்பான செயல்பாட்டிற்கு அடித்தளமிடுமேயானால், பின் வரும் காலங்கள் ஒவ்வொரு மனிதருக்கும் பொற்காலமாக வாழ்வதற்கு அடிகோலிச்செல்லும் அற்புதம் தோழர். V. இராமநாதன் அவர்கள் வாழ்வில் காவியம் படைத்திருக்கிறது.

நியாயங்களுக்கான
போராட்டம் இல்லாமல்
மார்க்சீயம் வளர முடியாது.

அநியாயங்களை
நிலை நிறுத்தாமல்
முதலாளித்துவம் வளர முடியாது.

– கார்க்கிப் பிரியன் –

**என்ன செய்வது..?**
**எப்படி செய்வது..?**

நட – அதிர்வின்றி
பேசு – பணிவாக
உண்ணு – அளவாக
சுவாசி – ஆழமாக
உடுத்து – அழகாக
உறங்கு – அமைதியாக
செயல்படு – அச்சமின்றி
உழை – உண்மையாக
சிந்தி – சுயமாக
பழகு – நாகரீகமாக
நம்பு – சரியாக
திட்டமிடு – முன்னதாக
சேமி – சிறிதாவது
செலவிடு – யோசித்து
ஈட்டு – நேர்மையாக
படி – முடிவின்றி

– கவிஞர். இ. கருணாகரன் –

**உறவு...**

இரண்டு மாதம்
விடுமுறை கழிந்து
சொந்த ஊர் பிரிந்து
பணிபுரியும் இடம் நோக்கி
பகலும் இரவுமாய்
இரயிலில்
நீண்ட நெடும் பயணம்
கூடவே வரும்
சொந்த ஊர்
சூரியனும், நிலாவும்.

– இராணுவ வீரன் –





மாணவர்கள், மாணவிகள், இளைஞர்கள், நகர்புறத் தொழிலாளர்கள், கிராமப்புற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இவர்களின் முன்னோடி களாக உள்ள பிரதிநிதிகளிடமும், புரிதலடைந்த மக்களிடமும், புரிதலுக்குத் தேடலில் ஈடுபடுவோர்களிடமும், மனித வாழ்விற்கு மட்டுமே உரித்தான கலையையும், தத்துவ ஞானங்களையும், உழைப்பின் உன்னதத்தோடு இணைத்து, அவைகளின் கூட்டு ஒருங்கிணைப்பின் செயலால் உருவாகும் உன்னதமான வாழ்வியல் இயக்க இயல் தன்மைகளை எடுத்தியம்பி, எழுத்துக் களால் வரைவு செய்து, படிக்கச் செய்து மனிதநேயத் தன்மைகளையும், மனிதநேயத் தன்மைகளுக்கு எதிராக நடைமுறையிலுள்ள ஒரு சிலர் செல்வந் தர்களாகவும், பலருடைய நிலபுலன்களை, உடலுழைப்பின் பலன்களை, அறிவு உழைப்பின் மேம்பாடுகளை சிலர் மறைமுகமாகக் கொள்ளை கொள்வதை யும், அப்படிக் கொள்ளை கொள்பவர்களை எதிர்த்துப் போராடும் போது, அரசு நிர்வாகங்கள் போலித்தனமான சனநாயகக் கோட்பாடுகளை அதிகாரத்தின் மூலமாக இவைகள்தான் சனநாயகம், இவைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதும், போராடுவதும் சனநாயக விரோதம் என்று போராட்டத்தின் ஒருங்கிணைப்பைக் குலைப்பதும், சமூகத்தில் நிர்வாகத்தில் நெருக்கடிகள் முற்றும் போது, ஏற்கனவே வடிவமைக்கப்பட்டுள்ள சமூக, அரசியல் அமைப்புக்கள் எந்த வர்க்கத்தின் நலனைப் பெரிதாகக் கொள்கிறது. ஏன் அவ்வாறு ஒரு சூழல் ஏற்படுகிறது..! இவைகளைச் சரியான திசை வழியில் நடத்த எப்படியான ஒருங்கிணைவு நடைமுறைகளை மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்று வழிகாட்டும் தலைமையும், அதன் கட்டமைப்புகளுமே மிகச் சரியான சனநாயகத் தன்மைகளை அடையாளப்படுத்த இயலும் என்பது வரலாறு நெடுகிலும் உள்ளங்கை நெல்லிக்கனியான உண்மைகளின் வெளிப்பாடாகும். உண்மையான சனநாயகச் சூழலை உருவாக்க முன்கை எடுக்கும் நாட்டில், மதவாதம், பயங்கரவாதம், அதிதீவிர வாதம், பாசிசப் போக்கு இவைகள் தலைதூக்க வேண்டிய அவசியமே ஏற்படாது. காரணம் மக்கள் அவைகளை நேசிக்க மாட்டார்கள். உண்மையான சனநாயகம் வேண்டி சில மகான்கள் பெரும் செல்வந்தர்களிடமும், செல்வந்தர்களின் நலனை முன்னிலைப்படுத்திக் கொண்டே சனநாயகம் என்ற சொல்லையும் அணிந்து கொண்டு இயங்கும் அரசுகளிடமும், வள்ளலாக மாறுங்கள், கருணை காட்டுங்கள் என்று கோரிக்கை வைத்துள்ளதையும் வரலாறு பதிவு செய்துள்ளதை நாமறிவோம்.

இந்திய நாட்டின் தேசத் தந்தை என்று போற்றப்படுகின்ற, மகாத்மா காந்தி என்றழைக்கப்படுகின்ற காந்தி அவர்கள், ஏழைகள் வறியவர்கள் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் எதுவும் செய்ய இயலாதவர்களாக நலிந்த நிலையில் வாழ்கிறார்கள். மிக மிகச் சிறிய அளவிலான சில மனிதர்கள் மட்டும், சில பல கம்பெனிகளுக்கும், தொழிற்கூடங்களுக்கும், நில புலன்களுக்கும் அதிபதியாக இருக்கிறார்களே ஏன் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு விடை தேடினாரா என்பதை நாம் கூற இயலாது. தேச விடுதலைப் போராட்ட களத்தில் அவர் ஒரு பாதையைக் காட்டி அந்த வழி வகை களில் மக்களை அழைத்தார் என்பதை நாமறிவோம். அந்நிய ஆதிக்கமாக

இருந்தாலும், சுதேசித் தலைமையிலான அரசு நிர்வாக நடைமுறைகளாயினும் மனித உழைப்பால்தான் மாந்த குலத்திற்கு விளையும் கழனிகள், வீதிகள், வீதிகளின் இருபுறமும் வீடுகள், கடைகள் எனவும், பேருந்துகள், தொடர் வண்டிகள், விமானங்கள், கழனியுழ கலப்பைகள், மண் வெட்டிகள், கால்களுக்குப் பாதுகாப்பளிக்கும் காலணிகள், வெயிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பளிக்கும் குடைகள், மனிதர்கள் தங்கள் அறிவை விரிவாக்கிக் கொள்ள கல்விச் சாலைகள், தொழில் வளம் பெருக தொழிற்சாலைகள், ஆழ்கடல் மீது பயணித்து மீன் வளத்தைக் கொண்டுவர, முத்தெடுத்து நம் கடல் வளத்தை உலகுக்கு உணர்த்த என இப்படிப்பட்ட உழைப்புக்களை மேற்கொள்ளும் பாட்டாளிகள் நாளை என்ன செய்யலாம், நாளை உலை வைக்க உணவுப் பொருட்கள் இல்லையே என பொருமித் தவித்து, எதுவும் செய்ய இயலாத ஏதிலிகளாய் வாழ்வின் பாதையைக் கடக்க இயலாமல் தடுமாறிவிழும் காட்சிகள்..! இப்படியான உழைக்கும் வெகு மக்களின் உழைப்பால்தான், இந்த உலகில் மனிதகுலம் மற்றைய உயிரினங்களைவிட ஏன் அனைத்தையும் விட உயர்வான உயிரினங்களாக வலம் வருகிறார்கள். இவர்களது உழைப்பின் பலன்களை மறைமுகமாகச் சுரண்டி முதலாளிகளான சிலர், சில பல கம்பெனிகளாக மாற்றமடைந்ததும் இப்பாட்டாளிகளால்தான். இவர்களது வாழ்வாதாரம் மோசமாயிருந்ததைக் கண்ட காந்தி அவர்கள் கூறுகிறார், பிர்லா, பஜாஜ் போன்றவர்கள் ஏழைகளுக்கு உதவும் தர்ம கர்த்தாக்களாக மாற வேண்டுமென்று – எந்த வெகுமக்களின் உழைப்பின் பலனைச் சுரண்டினார்களோ, அப்பலனில் சில சில்லறைகளை மட்டும் தர்மம் செய்யுங்கள் என்பதுதான் பொருள்.

ஒருவரை மனித நேயத்துடன் நடந்து கொள்ளத் தூண்டுவது, அறிவுறுத்துவது சரியானதுதான். தர்ம சிந்தனையுடன் செயல்படுபவர்களைப் பாராட்டுவது அவர்களை மேலும் உற்சாகப்படுத்துவதாகும். உழைக்கும் மக்களின் உழைப்பைச் சுரண்டுவதன் அடிப்படையில்தான் ஒருவர், ஒரு சிறு கும்பல் செல்வந்தர்களாக மாறுகிறார்கள். வள்ளல் குணத்தோடு செயல்படுங்கள், அப்படிச் செயல்படுபவர்களால்தான் சனநாயகம் என்பது செழிக்கும் என்பது, தன்னையும் ஏமாற்றிக்கொண்டு தன்னை நம்புகிறவர்களையும் ஏமாற்றுவதாகும். இதுதான் கொள்கை கோட்பாடு என்றால் அதை அறியாமலும் வெளியிடலாம் அல்லது அறிந்தும் சுரண்டலாளர்களை சனநாயகவாதிகளென்றும், அவர்களுக்கு ஆதரவாக பாதுகாப்பாக இருக்கும் அரசின் நடைமுறைகள் மட்டுமே சனநாயகம் என்பதாகவும் பொருள்படும்.

ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்நிலையில் உள்ளவர்கள், அனைத்துத் தரப்பிலுள்ள ஏழைகளில் சிலர் மட்டும் பணக்காரர்களாகி ஆதிக்கவாதிகளுக்கு நிகராக நிற்பதும், அதிகார வர்க்கத்தில் பங்கு பெறுவதோடும் சனநாயகம் மலர்ந்துவிடும் என்பதும் மிகத் தவறான முன்னுதாரணங்களாக மாறுமேதவிர சனநாயகப் பரிமாணத்திற்கு எந்த வகையிலும் சேர்மானமாகும் என்ற புரிதலுக்கான வழி வகைகளே கிடையாது..!





எல்லா புரட்சியாளர்களுக்கும் போல் இவருக்கும் சிறைக்கூடம் பயிற்சிக் கூடம் ஆனது. அந்தக் காலகட்டத்தில் வங்கப் புரட்சியாளர்களின் தோழமையும், அவர்களது சிந்தனைகளின் பரிமாற்றமும் தோழர். V.R. க்குக் கிடைத்தது. இவரை வெளியில் விட்டால் தங்களுக்கு ஆபத்து என நினைத்து மதுரை சதி வழக்கு ஒன்றினை இவர் மீது சுமத்தி மீண்டும் ஆறுமாத கடுங்காவல் தண்டனையைக் கொடுத்தது பிரிட்டிஷ் அரசு.

1932 ம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் கோபுரத்தின் மீது ஏறி தேசியக் கொடியை ஏற்றி பிரிட்டிஷ்காரர்களை வியக்கவும், வியர்க்கவும் வைத்தார் என்பதற்காகவும், சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கெடுத்தார் என்பதற்காகவும் மீண்டும் 3 ஆண்டு சிறைவாசம் கிடைத்தது தோழர். V.R. க்கு.

எல்லா தேசியத் தலைவர்களையும், தனக்குள் பிரியமுடன் அணைத்து அடைக்கலம் கொடுத்த புதுவை, சிறையிலிருந்து விடுதலை அடைந்த இவரையும் பெருமையுடன் வரவேற்றுக் கொண்டது.

இந்திய தேசிய விடுதலைப் போரின் தேசியத் தலைவர்களான பாரதியார், மகான் அரவிந்த கோஷ், வ.வே.சு. ஐயர், நாகசாமி போன்றவர்களுக்கு அடைக்கலமும், ஊக்கமும் கொடுத்தவரும், ஆஷ்துரை கொலை வழக்கில் முதல் குற்றவாளியென குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்ட வாஞ்சிநாதனுக்கு துப்பாக்கிப் பயிற்சி அளித்தவருமான கண்ணுப்பிள்ளை என்கின்ற முத்துகுமாரசாமிபிள்ளை அவர்களின் தொடர்பு ஏற்பட்டு புதுவைக்குச் சென்றார் தோழர். V.R.

புதுவையில் தொழிற்சங்கத் தலைவர் தோழர். சுப்பையா அவர்களின் அன்பிற்கும், தோழமைக்கும் உரியவராகி, புதுவை தொழிற்சங்க பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். விடுதலை இயக்கத் தொண்டர்கள் 1000 பேரை ஒன்று திரட்டி, அவர்களுக்கு பயிற்சியும் அளித்து பிரெஞ்சு அரசின் இராணுவ அடக்குமுறைக்கு எதிராகப் போராடினார். பிரெஞ்சுக்காரன் மட்டுமென்ன நல்லெண்ணத் தூதுவனா..? அவனும் நாடு பிடிக்கும் ஆசையில் நரி போல் புகுந்தவன் தானே. தோழர் V.R. நடவடிக்கைகளை பிரெஞ்சு அரசால் ஜீரணிக்க முடியவில்லை. தோழர் V.R. ஐ விரும்பத்தகாத பிரஜை எனக் கூறி அதே முத்திரையுடன் புதுச்சேரியைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது. 1937 ஆம் ஆண்டு புதுவையிலிருந்து வெளியேறினார் தோழர். V.R.

சென்னை வந்த அவர் தோழர். ஜீவா, தோழர். சீனிவாசராவ் ஆகியோருடன் சேர்ந்து கட்சிப்பணி ஆற்றினார்.

அவரது ஒரே மகன் துரை இறக்கும் தருவாயில் மதுரை வந்தார். அதுசமயம் அதாவது 1939 ஆம் வருடம் இரண்டாம் உலகப் போர் துவங்கியது. போருக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டார் தோழர். V.R. அதனால் இவரை கிடாரிப்பட்டு கிராமத்தைவிட்டு வெளியேறக்கூடாது என்று பிரிட்டிஷ் அரசு கட்டு கட்டி வைத்தது.

# பொதுவுடைமைப் போராளிகள் 1

## தோழர். V. இராமநாதன்

- கரிசல்குளம் ஜோதிமதி -
7373576490

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தோழர்களில் ஒருவரும், புதுச்சேரி தொழிலாளி வர்க்கப் போராட்டத்தில் தீவிரமாகப் பணியாற்றியவரும், தோழர். சுப்பையா அவர்களின் அன்புக்கும், தோழமைக்கும் உரியவருமான தோழர். V.R. என்கிற V. இராமநாதன் அவர்கள் மதுரை மாவட்டம் கிடாரிபட்டு கிராமத்தில் 1901 - ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை வீரமுத்து அவர்கள் மதுரையில் ஓர் மண்டி வியாபாரி. வியாபாரியான வீரமுத்து அவர்கள் தம் மகன் இராமநாதனை மதுரையில் உள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் கல்வியை செவ்வனே கற்று முடிக்க வைத்தார்.

ஆஜானபாகுவான தோற்றம் என்பார்களே அந்த கம்பீரம் இளம் வயதிலேயே தோழர். இராமநாதன் அவர்களுக்கு வாய்த்தது. உடற்பயிற்சி, கால் பந்தாட்டம், மல்யுத்தம் என அனைத்துத் திறன்களும் இவருக்குச் சொந்தமானது. இவைகள் எல்லாம் அவரது தனி திறமையென ஆன போதும், இந்தியத் தாய் பிரிட்டிஷ்காரர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலை அவர் நெஞ்சை அந்த இளம் வயதிலேயே கீறிப் பார்த்தது. தேசபக்தி அவரது இதயத்துள் ஊற்றாக பிரவாகமெடுத்தது. சிறகுகள் முளைத்து பட்டாம் பூச்சியாக பறக்க எத்தனிக்கும் இனிய இளமைப் பருவம். ஆம் அப்போது அவருக்கு வயது 19 - தான். ஆயினும் தேசபக்தியை தவிர வேறு கனவுகள் இந்த இளைஞனின் இதயத்தை தொட்டுபார்க்கக் கூட முடியவில்லை. வாழ்வின் தொடக்கத்திலேயே பொது வாழ்வில் தன் காலடிகளை உறுதியாகப் பதிக்கத் தொடங்கினார்.

அது சமயம், அதாவது 1920 ஆம் ஆண்டு காந்திஜி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்திருந்தார். தோழர். V.R. அவர்கள் அவ்வியக்கத்தில் தானும் ஒருவராகக் கலந்து கொண்டு, மதுரை தேசியத் தலைவர்களான வைத்தியநாத ஐயர், சிதம்பர பாரதி, மணப்பாறை ஸ்ரீனிவாச ஐயர் இவர்களுடன் சேர்ந்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்தார்.

இந்தச் சின்னஞ்சிறு பையனுக்கு இவ்வளவு தைரியமா..? இப்படியெல்லாம் ஒரு எண்ணமா..? இவனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டாமா..? என தனது வக்கிரப்புத்திக்கு சிங்காதனம் கொடுத்தது வெள்ளை அரசு. விளைவு தோழர். V.R. அவர்களுக்கு 15 மாத சிறை தண்டனை கிடைத்தது.





ஒடுக்கப்பட்டவர்கள், தாழ் நிலையில் உள்ளவர்கள், அனைத்துத் தரப்பிலுள்ள ஏழைகளில் சிலர் முப்பதாயிரம், நாற்பதாயிரம் என ஊதியம் பெற்றும், இன்னும் பிற வழிகளில் அவர்களும் பணக்காரர்களுக்கு நிகராக நின்றால் அது ஆதிக்க சக்திகளுக்கு ஒரு சவால் போலத் தோன்றும் என்ற நோக்கில், தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என்று போற்றப்படும் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கூறுகிறார். அவருடைய அவா, உணர்வுகள் வரவேற்கப்பட வேண்டியவையே. ஆனாலும் இவை அனைத்து மக்களுக்குமான சனநாயகத்திற்கு ஏதுவானதல்ல. இங்கே சாதிகள், மதங்கள், ஏற்றத்தாழ்வுகள் அனைத்திற்கும் முதல் தரப் பாதுகாப்பு அரணாகத் திகழ்வது தனிச் சொத்துரிமை அரசமைப்புதான்..! முடியரசுகள் அதன் பின்பு நிலப்பிரபுத்துவம், தற்போது தொழில் முதலாளித்துவம் இவைகள் ஒன்றை ஒன்று வீழ்த்திவிட்டுத்தான் அதிகாரத்தைக் கைப்பற்றி வந்துள்ளன. ஆனால் மையமாக ஒன்றை மட்டும் மேற்கண்ட அதிகாரத்துவங்கள் கைவிடாமல் பாதுகாத்து வருகின்றன. அதுதான் பலருடைய உழைப்பின் பலனை சிலர் சுரண்டிக் கொழுத்து ஏராளமான நிலபுலன்களை, உற்பத்திப் பொருட்களை, தொழில்களை, அதாவது ஆயிரம் , பத்தாயிரம் பேர்களுக்கான வாழ்வாதாரங்களை ஒரு சிலர் மட்டும் கையகப்படுத்திக் கொள்வதாகும்.

தோழர் மாக்சிம் கார்க்கி அவர்களின் **தாய்** நாவலில் , தாய் பாத்திரமான **பெலகெயா** அம்மையாரின் கணவனும், **பாவேல்** என்னும் இளைஞனின் தந்தையுமாகிய **மிகயில் விலாசவ்** என்ற தொழிலாளி தனது மகன் பாவேலிடம் இப்படிக் கூறுகிறான்.. “ மகனே, நான் குடித்துவிட்டு தடுமாறுகிறேன், உன்தாய் ஏன் இப்படி ஊதாரித்தனமாக நடந்து கொள்கிறீர்கள் என்று என்னை நோக்கி கேட்கும்போதெல்லாம் எனக்கு சினம் ( கோபம் ) மேலிட்டு, உன் தாயை அடித்தும், உதைத்தும் விடுகிறேன். மகனே என்னை மன்னித்துவிடு. நான் இந்தப் பஞ்சாலையில் பணிக்குச் சேரும்போது, ஒரு அடுக்குக் கட்டிடமாகத்தான் இருந்தது. இன்று சில ஆண்டுகளில் மூன்று அடுக்கு நான்கு அடுக்குகளாக விரிவடைந்தள்ளது.! எங்கிருந்து இந்த முதலாளிக்கு இவ்வளவு பணம் வந்தது, எல்லாம் என் போன்ற தொழிலாளிகளின் உபரி உழைப்பின் பலன்களை அவர் கொள்ளையிட்டதுதான். எனக்கோ, என் போன்ற தொழிலாளிகளுக்கோ, இதை எதிர்த்து நின்று எங்களைச் சுரண்டாதீர்கள் என்று கேட்க முடியவில்லை. எங்களை ஒருங்கிணைக்கும் தலைமைகளும் உருவாகவில்லை. தொழிலாளர்கள் இவைகளைக் கேட்டால் இந்த வேலையும் போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். சில வேளைகளில் இவைகளைப் பற்றி சிந்தித்தால் மண்டைக்குள் குழப்பம் அதிகரிக்கிறது. அதனால் விரக்தியில் நானும் என்போன்ற தொழிலாளர்களும் பாரக் குடிகாரர்களாக மாறிவிட்டோம், கிடைப்பதோ சொற்ப வருமானம் அதையும் உன் தாயிடம் நான் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. வீட்டில் போதுமான தேவைகள் நிறைவேறுவதில்லை. நானும் வேளா வேளைக்கு உண்பதில்லை. எனக்குப் புரிகிறது, இருந்தும் ஏதும் செய்ய இயலவில்லை..! நான் சீக்கிரம் மரணித்துவிடுவேன் ” என்கிறார்.

தந்தையின் மன வேதனையைக் கேட்டுவிட்டு, " அப்பா நீங்கள் உங்களை உணர்ந்து கொண்டீர்கள், முதலாளித்துவத் தொழிற்புரட்சி காலப்போக்கில் தொழிலாளிகளைச் சுரண்டத் தொடங்கிவிட்டது. நிலப்பிரபுத்துவத்தை விட அழைப்பதில், பழகுவதில் சனநாயக மரபுகள் வந்து விட்டது. இதுதான் முதலாளித்துவத்தின் குறைந்தபட்ச சனநாயகம். ஆனால் இதன் உள்நோக்கம், கடந்தகால அடிமைகளைப் போல கொடுமைப்படுத் தாமல், தோலிருக்க பழச்சுளையைப் பிடுங்குவதான செயலாகும். " என்கிறான் பாவேல்.

யுகப்புரட்சித் தலைவன் தோழர் லெனின் தலைமையில் போல்சுவிக் கட்சித் தோழர்களும், சோவியத் மக்களும் கட்டியெழுப்பிய சனநாயத்தின் பூரணத்துவத்தை நோக்கிப் பயணித்த அந்த இலட்சியக் கோட்பாட்டிற்குள், இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின், நாங்களும் சமூக விஞ்ஞானக் கோட்பாட்டாளர்கள்தான் என்கிற போர்வைக்குள் நுழைந்து திரிபுவாதத்தையும், திருத்தல்வாதத்தையும் இதுதான் சமூக விஞ்ஞானம் என்று பாட்டாளி வர்க்கத்திடம் பரவவிட்டார்கள். உலகமெங்கும் மார்க்சீய – லெனினிய சமூக விஞ்ஞானத்தை எதிர்த்துக் கொண்டிருந்த சுரண்டல் தத்துவார்த்தவாதிகளும், சுரண்டல் பெருமுதலாளிகளும், அரசு நிர்வாகங்களும் மகிழ்ச்சியோடு திருத்தல்வாதம், திரிபுவாதங்களோடு கை குலுக்கி, நாங்களும் பாட்டாளி வர்க்கத்திற்கு நேசமானவர்கள்தான் என்று கூக்குரலிட்டார்கள்..! உண்மையான சனநாயகம் சாக்கடைப் பள்ளம் நோக்கி எறியப்பட்டது. போலி சனநாயகம் கொடி கட்டிப் பறக்கிறது.

உண்மையை அறிந்து கொண்டவர்கள், உள்ளத்தில் எரிமலை குமுற வாய்களைப் பொத்தி மவுனிகளாக உள்ளார்கள். வாய்களைப் பொத்திக் கொண்டு எரிமலைகளை எத்தனை நாட்கள் அடக்க இயலும்..! இதைப் புரிந்து கொண்ட ஏகாதிபத்திய மேலாதிக்கம், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை, தாய்மொழியறிவை கசையடித்து, மூன்றாம் உலக உழைக்கும் வெகு மக்களின் சிந்தனைகளை கசையடித்து, தங்களைத் தாங்களே உணராத **மண்டூக** நிலைக்குத் தள்ளும் ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு செயலாற்றி வருகின்றன..!

இன்றும், நேற்றும், அதற்கு முந்தியும், நாளையும் கூட சனநாயகம், தேசம், தேச ஒற்றுமை, மாற்றம், வளர்ச்சி இவைகளை மக்கள் உணர்கிறார் கள்..! ஆனால் இருக்க இடமில்லாமல், இரண்டு வேளை உணவு கூடக் கிடைக்காமல் நித்தம் அத்தக்கூலி வேலைகூடக் கிடைக்காமல், தாங்கள் சார்ந்த மதங்களால், சாதிப் பிரிவுகளால் உருவாக்கப்பட்டுள்ள விழாக்களைக் கூட கொண்டாட இயலாமல் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தவிக்கிறார்கள். மூன்றில் ஒரு பங்கு மக்கள், வறுமையிலும் வறுமையாக, கொடுமையிலும் கொடுமையான துயரத்தில் உழல்கிறார்கள்.





ஏகாதிபத்தியத்தின் முன் மண்டியிட மறுத்த மாவீரன் சதாம் உசேனைத் தூக்கிலிட்டது. ஈராக்கைக் கைப்பற்றிய கையோடு லிபியாவைச் சிதைத்தது. வெள்ளைப் பெட்ரோல் கொழிக்கும் அந்த நாட்டை ரத்த பூமியாக்கியது. அமெரிக்காவுக்கு அஞ்ச மறுத்த மும்மர் கடாபியை ஒரு தெரு நாயைப் போல சுட்டு சாக்கடையில் வீசி எறிந்தது.

சிரியாவில் ... தலிபான்களை விட கொடிய ஐ.எஸ். பயங்கரவாதிகளை உருவாக்கி ஆயுதமும், பணமும் கொடுத்து சிரியாவின் மக்களைக் கொன்று குவித்தது. இரண்டாம் உலக யுத்தத்தில் கொடியவன் ஹிட்லரின் படைகளுக்கு சோவியத் ஒன்றியத்தின் ஸ்டாலின்கிராடில் எப்படி சமாதி கட்டப்பட்டதோ அதே போல அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடிய போர் வெறிக்கு சிரியாவில் சமாதி கட்டப் பறப்பட்டது ரஷ்யா. ரஷ்யாவின் ஆயுத வலிமை அமெரிக்காவுக் குத் தெரியும். வேறு வழியில்லாமல் கடந்த 25 ஆண்டுகளில் முதன் முறையாக போர் நிறுத்தம் என்றும், பேச்சு வார்த்தை என்றும் பேசத் துவங்கியது அமெரிக்கா. ஆப்கான், ஈராக், லிபியா ஆகிய நாடுகளைப் போல சிரியாவும் கேட்பாரின்றி அடிமையாக்கப்படும் அபாயத்தை தடுத்து நிறுத்தியது ரஷ்யா. கடந்த சில ஆண்டுகளாக கொடிய ஆயுதங்களை ஏந்தி, அப்பாவி களை குரூரமாகப் படுகொலை செய்து வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகளை சிரியாவில் துவம்சம் செய்தன ரஷ்யப் படைகள்.

அன்றைய சோவியத் செஞ்சேனை உருவாக்கித் தந்த வல்லமை... பாதுகாப்பு, அறிவியல், விண்வெளி, கல்வி, சுகாதாரம், அத்தனை துறைகளி லும் ரஷ்யாவின் இன்றைய வளர்ச்சி... ஏகாதிபத்திய அமெரிக்காவே பார்த்து அஞ்சும் ரஷ்யாவின் புவி அரசியல் வியூகங்கள்... என அனைத்துக்கும் அடிப்படை சோவியத் ஒன்றியம் என்னும் கம்யூனிச பூதமே..!

1992 இல் சோவியத் ஒன்றியம் அந்த நாட்டின் மக்களது விருப்பத் திற்கு மாறாகத்தான் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளால் வீழ்த்தப்பட்டது. அதற்கு முன்னதாக நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் சுமார் 75 சதவீத மக்கள் சோவியத் ஒன்றியம் சிதறாமல் நீடிக்க வேண்டும் என்று வாக்களித்தார்கள். இன்றைக்கும் 60 சதவீதத்திற்கும் அதிகமான ரஷ்ய மக்கள் மீண்டும் சோவியத் ஒன்றியம் மலர வேண்டும் என்று வாக்களித்திருக்கிறார்கள்.

இப்போதும் ஏகாதிபத்திய நாடுகளைத் துரத்திக் கொண்டிருக்கிறது கம்யூனிச பூதம்.

நன்றி : புதிய ஆசிரியன் மாத இதழ், 6, காக்காதோப்பு தெரு, மதுரை – 1.




– எஸ்.பி. ராஜேந்திரன் –

**ஐ**ரோப்பா கண்டத்தை ஒரு பெரும் பூதம் துரத்திக் கொண்டிருக்கிறது. அந்த பூதத்தின் பெயர் கம்யூனிசம்... – சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு மாமேதைகள் காரல் மார்சும், ஏங்கெல்சும் கம்யூனிஸ்ட் அறிக்கை என்ற தங்களது நூலை இந்த வரிகளுடன்தான் துவக்கினார்கள். இன்றைக்கும் அது பொருந்துகிறது.

சோவியத் ஒன்றியம் என்றொரு நாடு இருந்தது. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு யு.எஸ்.எஸ்.ஆர். என்ற எழுத்துகள் இந்த உலகம் முழுவதும் அன்றாடம் உழைத்து வாழும் ஒவ்வொரு தொழிலாளியையும், ஒவ்வொரு விவசாயியையும், ஒவ்வொரு இளைஞனையும், மாணவனையும் சுண்டி இழுத்தது. கவ்விப் பிடித்தது என்று கூறினால் இப்போது விந்தையாக இருக்கும். சோவியத் ஒன்றியம் என்ற நாடு இன்று இல்லை.

கம்யூனிச பூதமான சோவியத் ஒன்றியம் வீழ்ந்த பிறகு, தனிக்காட்டு ராஜா போல தன்னைக் கருதிக் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் 1990 களில் ஈராக்கைத் தாக்கியது. வளைகுடா பிரதேசத்தில் எண்ணெய் வெறி கொண்டு கொடிய போர்களை கட்டவிழ்த்துவிட்டது. ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளை உருவாக்கியது. தலிபான்களைக் கொண்டு வெறியாட்டம் நடத்தியது. உலகின் பல பகுதிகளிலும் அமெரிக்காவின் நாசகர உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ. ஏராளமான பயங்கரவாதக் குழுக்களை உருவாக்கி ஆயுதமும் நிதியும் அள்ளி வழங்கியது. 2000 த்தின் துவக்கத்தில் அதே தலிபான்களையும், பயங்கரவாதிகளையும் அழிப்பதாகக் கூறி ஆப்கானிஸ்தான் மீது தீராத யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டது. லட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்தது. மீண்டும் ஈராக்கை யுத்தகளமாக்கியது. லட்சக்கணக்கான குழந்தைகள் கொத்து கொத்தாக கொல்லப்பட்டார்கள்.





ஆனால், நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதாரம் மிக நன்றாக உள்ளது. நாடு வல்லரசாக உயர்ந்து கொண்டிருக்கிறது என்கிறார்கள் இது எப்படி..? நாட்டின் அனைத்துப் பொருளாதாரங்களும் சில பெரும் முதலாளிகளிடமும், நிர்வாகம் செய்யும் உயர் அதிகாரிகளிடமும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், அமைச்சர்களிடமும் குவிந்துள்ளது. அரசு நிர்வாகம் தனிச் சொத்துரிமை சுரண்டலாளர்களுக்கு ஆதரவாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதை எந்த ஞானியும், மனிதநேயமிக்க மகான் என்பவர்களும் உபதேசங்களால் மாற்றம் செய்ய இயலவே இயலாது..! அவை வெறும் பிதற்றலாகத்தான் முடியும். தங்களோடு அணிசேரும் மக்களிடம், சோசலிசம் பேசும் தலைவர்கள்கூட சரியான அரசியலை எடுத்துரைப்பதில்லை. புரட்சிகர சோசலிசம் பேசிக் கொண்டே தேர்தல் காலங்களில் கூட்டணி அமைத்துக் கொண்டு வாக்களிக்கச் சொல்கிறார்கள். பொது மக்களும், நாம் செலுத்தும் வரி, நுகர் வரிப்பணத்தைக் கொள்ளை கொள்ளவே நாம் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள் சட்டசபைக்கும், நாடாளுமன்றத்திற்கும் செல்கிறார்கள். நமக்கு எதுவும் செய்யமாட்டார்கள். செய்யவும் முடியாது. ஆகவே, இப்போது இவர்கள் கொடுக்கும் ஒரு ஓட்டுக்கு 500, 1000, 2000 ரூபாவையாவது பெற்றுக் கொண்டு வாக்களிப்போம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.! நமது தமிழகத்தைப் பொறுத்தவரை, தமிழ் மொழி சங்ககாலம் தொட்டு சிறந்து, நுணுக்கமான அறிவுடைமை நோக்கில் வளர்ந்து வருகிறது என்பதன் பொருட்டே, தாய்மொழி தமிழைக் கல்வியிலிருந்து புறக்கணித்துவிட்டார்கள். ஆக உண்மையான சனநாயகம் மூடி மறைக்கப்பட்டு, போலி சனநாயத்திற்கு பொய்களால் ஆன ஜிகினா வேலைப்பாடுகள் சோடிக்கப்பட்டு வீதி உலா வருகின்றது..! இவைகளை மாற்றி சரியான ஜனநாயக வழிமுறைகளை அடையாளப்படுத்த, உழைக்கும் வெகுமக்கள் திரளைத் திரட்டும் பணி மட்டுமே தீர்வாகும்.

அறத்தாறு இதுவெனவேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. (திருக்குறள் அதிகாரம் 4, அறன் வலியுறுத்தல்)

பல்லக்கைச் சுமப்பவனும் அதன் மேலிருந்து ஊர்ந்து செல்வோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூற வேண்டா.

குறிப்பு : மண்டூகம் என்றால் தவளை.

**ஹைக்கூ...**

**அ**ணை கட்டினார்கள்
விரிசலடைந்தது
ஒற்றுமை.

**ஆ**சிரியர் தினம்
ஆரியர் தினமானது
குரு உச்சவ்.

– எம்.பி. கனிவேல் –



# பகத்சிங் மணி மொழிகள்



**இ**ன்று நடைமுறையில் இருக்கும் சம்பிரதாயத்தை நம்பிக்கையை ; மதத்தை ; மக்களால் பூரணமாய் மதிக்கப்படும் ஒரு மகானை ; அவதாரப் புருஷனை குறை கூறி விரோதித்துப் பாருங்கள். உங்களை வீண் கர்வம் பிடித்தவர்கள் என்று பழித்தும், இழித்தும் பொது மக்கள் தூற்றுவார்கள். மனத்தால் எண்ணாமல் மூளையால் சிந்திக்காமல் தேங்கி நிற்பதன் பலனே இந்த நிலைமை என்பேன்.

●

**ம**காத்மா ஒரு பெரியவர் ; ஆதலால் அவரைக் குறை கூறக் கூடாது. உயர்நிலை அடைந்துவிட்ட அவர் கூறுவதெல்லாம் அரசியல் துறையிலோ, பொருளாதாரத் துறையிலோ அல்லது மதத்துறையிலோ சரியானதே ஆகும். உனக்குச் சரி என்று பட்டாலும், படாவிட்டாலும் ஆம்.! அவர் கூறுவது உண்மைதான் என்று சொல்லித் தீரவேண்டும்... என்கிற இப்படிப்பட்ட மனப்பான்மை நம்மை முன்னேற்றப் பாதையில் ஓரடி கூட நடத்தாது. இது மிகப் பிற்போக்கான எண்ணம்.

●

**ம**னிதனின் முதற் கடமை குருட்டு நம்பிக்கையை சின்னா பின்னமாகச் சிதறடிக்க வேண்டும். அதுவே புதிய தத்துவத்தை நிலை நிறுத்துவதற்கான நிலத்தைச் செப்பனிடுவதாகும். இது அழித்தல் வேலையல்ல. ஆக்க வேலையின் ஆரம்பம்.

**ஒ**வ்வொரு மனிதனுக்கும் பகுத்தறிவே வழிகாட்டும் நட்சத்திரமாக ஒளிர்கிறது. வீண் நம்பிக்கையும், குருட்டு நம்பிக்கையும் ஆபத்தை விளைவிக்கும். அது மூளையை மந்தப்படுத்தி மனிதனைப் பிற்போக்காளனாக மாற்றி விடுகிறது.

●

**ச**மூகத்தின் பிரிக்க முடியாத அங்கமான தொழிலாளர்கள் உழைப்பைச் சுரண்டல்காரர்கள் அபகரிக்கின்றனர். அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் கூட தரப்படுவது இல்லை. உணவை உற்பத்தி செய்யும் விவசாயி தனது குடும்பத்துடன் பட்டினியில் வாடுகிறான். உலக சந்தைக்கு துணி நெய்து கொடுக்கும் நெசவாளி தனது மற்றும் தனது குழந்தைகளின் உடலை மறைத்திட துணியின்றி துன்பப்படுகிறான். மாட மாளிகைகள் கட்டும் தொழிலாளி குடிசைகளில் வசிக்கிறான். இந்தச் சூழ்நிலை வெகு நாட்களுக்கு நீடிக்காது.

●

**பு**ரட்சி என்பது வெறும் யுத்தம் அல்ல. தனிநபர் பழி தீர்த்தலுக்கு அதில் இடமில்லை. குண்டுகள் அல்லது துப்பாக்கிகளுக்கு துதி பாடுவதும் புரட்சி அல்ல. அநீதியின் மீது அமைந்துள்ள இந்தச் சமூக அமைப்பு மாறவேண்டும் என்பதே புரட்சிக்கு நாங்கள் கூறும் பொருள் ஆகும்.

பாவலர் கருமலைப்பழம் நீ அவர்களின் “ பகத்சிங் மணிமொழிகள் ” என்னும் நூலிலிருந்து.